ஞாயிறு வெளியீடு ஆண்டு சந்தா ரூ. 5 தனிப்பிரதி 0—1—3 REGD. No. M. 4642

# திராவிடநாடு

மலர் 4 | காஞ்சிபுரம் 17—3—1946 | இதழ் 48

## எங்கள் குற்றத்தை நாங்களே சொல்லிக் கொள்ளுகிறோம்

கைவல்யம்

வாலிபர்களே! படித்தவர்களே! பட்டதாரிகளே! பண்டிதர்களே! சுயமரியாதைச் சங்கமும், திராவிடர் கழகமும் சொல்லுவதைச் சற்று ஆலோசித்துப் பாருங்கள். எண்ணத்தால்உண்டாகும்கோபத்தையும், அலட்சியத்தையும் நிறுத்தி ஆலோசித்துப்பார்க்கும் அறிவால் தப்பு, சரிஎன்பதைத் தெரிந்து கொள்ளக் கேட்டுக் கொள்கிறோம்.

தேசியவாதிகளும், இராச்சியாதிகாரவாதிகளும், சமயவாதிகளும் தங்களுக்கென்று என்ன உரிமை கொண்டாடுகிறார்களோ அதே உரிமையையே எல்லாமக்களுக்கும் வழங்குங்கள் என்றே சொல்லுகிறோம். சமய வாதிகள் தங்கள் சமயம் என்னும் கப்பலை வைதிகம் என்னும் துறைமுகத்தில் கட்டிப்போட்டு வெயிலிலே உலர்ந்து போகுமாறு விட்டுவைக்கிறார்கள், பழைய கொள்கைகளாகிய பாய்மரத்தின்மீது பழைய அபிப்பிராயங்களாகிய கப்பற்பாய் அடிபட்டு அலறும் சத்தத்தைக் கேட்டுக்கொண்டிருப்பதிலே திருப்தியடைகிறார்கள். கப்பலின் இணைப்புகளும் மேல்பாகங்களும் வெயிலிற் காய்ந்து சந்து விடுவதைக்கண்டு சந்தோஷம் கொள்கிறார்கள். இவைகளைத்தான் நாங்கள் கூடாதென்கிறோம். அவைகளெல்லாம் நமது ஆண்மையை அடக்கி அறிவை அழித்து விட்டன. அந்தச்சுமை நம்மை முன்னேபோகவொட்டாமல் பின்னே இழுக்கிறது. சென்ற காலப் புழுதியும் சருகும் புதியஉதயத்தை மறைக்கின்றன. அந்தஉபயோகமற்ற சுமையைக் கூசாமல் வீசி எறிந்துவிடவேண்டும் என்று தான் சொல்லுகிறோம். நாம் எதையும் ஆலோசித்துப்பார்ப்பவர்களாக இருக்கவேண்டும். எப்பொழுதும் பிறரைப் பின்பற்றிக் கொண்டிருப்பவர்களாகவோ, மற்றவர்கள் எதிரில் ஊர்ந்து செல்லுகிறவர்களாகவோ, கெஞ்சுபவர்களாகவோ இருக்கக்கூடாது. தேவலோகத்தில் எல்லையற்ற பரம்பொருள் என்று சொல்லும் கடவுள் ஒருவர் இயற்கையாகவோ, சக்தியாகவோ இருப்பாரானல் அவர் கோழைகளின் கும்பிடுதலையும், வஞ்சகர்களின் வழிபாட்டையும், பொருள் பறிக்கும் புரோகிதரின் மந்திரதந்திரங்களையும், ஏழைகளை வாட்டி வதைக்கும் பணக்காரர்களின் பிரார்த்தனையையும் ஏற்றுத்திருப்தியடையவேமாட்டார். காற்று, நெருப்பு, தண்ணீர், மண், வான்முதலியபஞ்சபூதங்கள் எந்தமனிதனையும் கொண்டாடுவதில்லை. பஞ்ச பூதங்களுக்கு மேலான கடவுளும் எந்தமனிதனையும்கௌரவப்படுத்துவதில்லை.

மகாத்மாக்கள் என்பவர்களெல்லாம் அவரவர்கள் கூட்டத்திற்குத் தக்கபடியும், தங்கள் காரியங்கள் அனுகூலமாவதற்கு ஏற்றபடியும் வேஷம்போட்டு விளம்பரப்படுத்திக்கொள்ளும் வேஷதாரிகளே யாவார்கள். மொட்டை ஆண்டி, கோவண ஆண்டி, சடையாண்டி, புலித்தோல் அணிந்திருப்பார், பிச்சை எடுப்பார், காவி போட்டிருப்பார், கந்தை கட்டியிருப்பார், பூணூல் போட்டிருப்பார் என்று கடவுள் தன்மை நமக்குக் கற்பிக்கப்பட்டிருக்கிறது. அப்படியே பக்தர்களும் மகாத்மாக்களும் இருப்பார்கள் என்றுகாட்டப்பட்டுமிருக்கிறது. எனவே மகாத்மாக்கள் என்பவர்களும் அத்தகைய வேஷங்களைப் போட்டுக்கொள்ள அவசியம் ஏற்படுகிறது. பண்டிதர்களால்சொல்லக் கேட்டவர்களும், அவர்கள் எழுதிய புத்தகங்களைப் படித்தவர்களும், அவர் சொல்லக் கேட்டு, இவர் சொல்லக்கேட்டு என்று கேட்டமக்களெல்லாம்கூட்டம் கூடுவதும், பக்திசெலுத்துவதும், பாதத்தில் விழுவதும், பணம் கொட்டிக்கொடுப்பதும் ஆச்சரியமல்ல. ஊதிக்கொடுக்கும் மஸ்தானுக்கும் உண்டை கொடுக்கும் பரதேசிக்கும், பிள்ளைவரம் கொடுக்கும் பூசாரிக்கும் கூட்டம் கூடாமலா இருக்கிறது!

சங்கராச்சாரி, இராமானுஜாச்சாரி, மாத்வாச்சாரி, நீலகண்ட சிவாச்சாரி, சைவசமய ஆச்சாரிகள் முதலிய எல்லா ஆச்சாரிகளும் மகாத்மாக்கள் என்று மதிக்கப்பட்டவர்கள்தான். அவரவர்கள் ஏற்பாட்டிற்குத் தகுந்தபடி வேஷமும் இருந்தது. புத்தி நுட்பத்திலும் தத்துவ விசாரணையிலும் உயர்ந்தவர்களென்றாலும் கடவுள் விஷயத்திலும், ஆத்மா விஷயத்திலும் சமுதாயத்திலும் ஒருவர் சொன்னபடி இன்னொருவர் சொல்லவில்லை. யார் சொன்னது சரி, யார் சொன்னது தவறு என்று அவர்களுக்கே தெரியாது. ஆகாயத்தில் கோட்டை இருந்ததாக எல்லோரும் கற்பித்துக்கொண்டு அதன் சித்திரத்தில் தர்க்கம் பண்ணினார்கள். அவர்களெல்லாம் பிராமணஜாதி. ஆச்சாரி ஸ்தானத்தில் மற்ற ஜாதிகளுக்கு உரிமையில்லை. மற்ற ஜாதிகளில் மகாத்மாவென்கிறபோக்பதைக்கு பிராமணர்களைத் தோளில் தூக்கி ஊர்சுற்றினால் வாயளவிலேனும் மகாத்மாவென்று தன்மட்டிலும் சொல்லிக்கொள்ளலாம். அப்பொழுதும் அவர்கள் பிராமண கற்பனைப்பிரசாரம் பண்ண வேண்டும். ஆகாயத்தில் கோட்டை இருந்து மாளிகைப்படிக்கட்டப்பட்டது! அதில் சித்திரம் இருப்பதாகவின் தர்க்கம் பண்ணுகிறீர்களே என்று யாராவது கேட்டுவிட்டால், கொடுந்தண்டனையால் கொன்றுவிடுவார்கள். இது நமது தர்மசாஸ்திரம்என்கிற—தெய்வத்தால்சொல்லப்பட்டவேத—சட்ட ஒழுங்கின் முறை. இதைப்போலவே முன் இறிஸ்துவஆச்சாரி பீடத்தின், வாக்கியங்களை ஆட்சேபித்தவர்களையும் கொடுமையாய்க் கொன்றார்கள். இந்த உலகம் எவ்வளவோ துன்பத்தை அநுபவித்திருக்கிறது! நமது மூதாதைகள் எவ்வளவுகாலம் அடிமைகளாக இருந்தார்கள்! அரசசிங்காதனத்தின் அடியிலும், ஆச்சாரியின் தண்டத்தின் புழுதியிலும் எப்படிக் [illegible] யும் பணிந்தும் கிடந்தார்கள்! [illegible] கள் தங்களை எப்படி இழிவுபடுத்திக்கொண்டார்கள்! அதிகாரஉடையும் வேஷமும்தரித்த மூடநம்பிக்கையின் சந்நிதானத்தில் அவர்கள் எப்படித் தங்களைத் தாழ்வுபடுத்திக் கொண்டார்கள்! இவைகளை எல்லாம் ஆலோசித்துப் பார்க்கவேண்டியதில்லை. இப்பொழுதிருக்கும் நிலையையும் மூடநம்பிக்கையையும், பார்ப்பனனிடம் மோட்சவாசஞ்சாவி இருப்பதையும், சென்னத்தில் என்று படம் போட்டுப் பத்திரிகையில் எழுதும் ஆச்சாரி ஜாதியின் எண்ணப்போக்கையும் ஆலோசித்துப்பாருங்கள். நாம் பார்ப்பனர்களைக் குற்றம் சொல்லுகிறோம் திட்டுகிறோம் என்று குறை கூறுபவர்கள், கூறிக்கொண்டிருக்கட்டும். நாம் ஏன் கூறுகிறோமென்பதை அவர்களும் விரைவில் அறிவார்கள்.

பார்ப்பனர்கள் [illegible] லாம் சூத்திரர்கள் என்கிறார்கள். வேதஸ்மிருதிகளில் சூத்திரன் என்றால் பார்ப்பன தாசிமகன், விலைக்கு வாங்கப்பட்டவன், ஏவல்பணி செய்வோன், அடிமை என்றெல்லாம் அர்த்தம் எழுதப்பட்டிருக்கிறது. இலக்கிய இலக்கண [illegible] இலேசபுத்தியுடையவன், மடையன் என்று எழுதியிருக்கிறது. இதிகாசபுராணங்களில் ஆச்சாரமில்லாதவன், ஒழுக்கமில்லாதவன், [illegible] தைப்புசிப்பவன் என்று எழுதப்பட்டிருக்கிறது. அதைச் சமயவாழ்க்கையில் நடத்தியும் காட்டுகிறார்கள். திருவையாற்றில் நந்தனாரேயின் பாடின இடத்தில் பார்ப்பன வித்வான் பாட மறுத்ததற்குக்காரணம் என்ன? [illegible] வர்கள் நம்மை ஜாதிக்கு [illegible] பட்டவைகளை எல்லாம் [illegible]

[illegible]

### அவர்கள் படும் அல்லல்



**முருகனும், கணபதியும்:-**

(பிரமனை நோக்கி) அண்ட, சரா சரங்களையும் படைத்த பிரம்ம தேவரே! யானை முகத்தையும் ஆறு முகத்தையும் தாங்கிக்கொண்டு நாங்கள் படும்பாடு உமக்குத் தெரியாதா? ஏன் இந்தச் சிரமம் எமக்கு?

**பிரமதேவன்:-**

மைந்தர்காள்! உங்களுக்குத்தானு அந்தக் கஷ்டம்? என்னைப்பாருங்கள், நான்கு தலைகளும், எட்டுக் கைகளுமாக தானுந்தான்...............................

என்ன செய்வது. எல்லாம் தலை எழுத்தப்பா, தலை எழுத்து!

# வந்துடுத்தே, சோதனை காலம்!

—●—

## சேலத்தில் இரட்டை அவதாரம்!

—(குகு)—

இரயில் வண்டி விழுந்ததற்குக் காரணமென்ன?

இரயில்பாதைவளைந்துள்ள இடத்தில் ட்ரைவர் மெதுவாக ஓட்டாமல் இருந்திருக்கலாம்.

ஆனால் இரயில் விழுந்திருக்கும் இடத்தில்வெகு தொலைவுக்குஇரயில் பாதை நேராகத்தானே இருக்கிறது?

அப்படியானால் எவனேனும் இரயில்பாதையைப் பெயர்த்திருக்கலாமோ?

ஆமாம்! அதுதான். இரயில்பாதையிலுள்ள குறுக்குக்கம்பிகள் அகற்றப்பட்டிருக்கின்றன. தண்டவாளம் ஆட்டங்கண்டு எஞ்சின் கீழே இறங்கி வெகுதூரத்திற்குப் போய் விட்டதனால் இரயில் கவிழ்ந்தது.

இதுதான்இரயில்விபத்தைப்பற்றி நடைபெற்ற விசாரணையின் முடிவு.

ஆனால் தண்டவாளத்தைப் பெயர்த்தவன் மட்டும் அகப்படவில்லை, போலீசார் புலன் விசாரித்துவருகின்றனர். அவன் மட்டும் அகப்படுவானேயானால்............?

* * *

"குழந்தைக்கு இப்போதுவயிற்றுவலி போய்விட்டதா?"

"வயிற்று வலியா? குழந்தையே போய்விட்டதே! ஐயயோ! என்ன செய்வேன்?"

'அட பாவமே! குழந்தை செத்தாபோச்சு! வயிற்றுவலி தேவலைபாப்போச்சுன்னுசொல்லி, வேண்டுதலையை நிறைவேத்துவதுக்குத் திருப்பதிக்கு அழைச்சுகிட்டுப் போனியே! எப்போ வந்தே?"

"அந்தக் கண்றாவியை ஏன்கேட்கிறேயப்பா? ஏழுமலையானுக்கு மொட்டையடிச்சுட்டுக் கீழே வந்ததுமே ரெண்டுதரம் பேதியாச்சு! அவ்வளவுதாண்டா! ஒரே புள்ளே! போய்ட்டாண்டா! வாயிலே மண்ணைப்போட்டுகிட்டு வந்துதொலைஞ்சேண்டா!"

"திருப்பதியிலே காலராண்ணு பேசிக்கிட்டாங்களே, நீ போகலாமா அந்தமாதிரி சமயத்திலே?"

தீராத வினையையெல்லாம் தீர்த்து வைப்பான் கோவிந்தன் என்பதை நம்பித் தன் ஒரே பிள்ளைக்கு முடியெடுக்கப்போனவன் அங்கே காலரா இருப்பதை அறியாமல் பிள்ளையைப் பறிகொடுத்த விஷயம் இது.

திருப்பதியில் முனிசிபல் ஹெல்த் ஆபிசர் (சுகாதார உத்யோகஸ்தர்) உண்டு. ஏழுமலையானுக்கும் ஹெல்த் ஆபீசருக்கும் ஜனங்கள் உயிரின் மீது கூட்டுப் பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் ஒரே ஒரு சிறு விஷயத்தில்மட்டும் வேற்றுமை. ஏழுமலையான் தவறினால் (அவனா தவறுவான்?) அவனை நேரில் விசாரணைசெய்ய எந்த நாதியும் இல்லை. அவன் 'அநாதி'யல்லவா? ஆனால் ஹெல்த் ஆபீசர் நிலைமை சிக்கலானது. 'காலராவில் இத்தனை பேர் சாகும்படியாக ஏன் விட்டாய்?' 'பிளேக்பரவுவதை உடனே ஏன் தடுக்கவில்லை?' 'உடனே சமாதானம் தேவை,' என்று மேல் உத்யோகஸ்தரிடமிருந்து கேள்வி வரும்.

* * *

சென்னை மாகாணத்தில் பஞ்சம் ஏற்படுமோஎன்றபயங்கர நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இதற்குக் காரணம் என்ன? என்ற கேள்விக்கு எல்லோரும் ஒரே பதிலைத்தான் கூறுகிறார்கள்.

"மழை இல்லை; அதனால் ஆறு, ஏரி, குளங்களில் தண்ணீர் இல்லை."

சரி; அடுத்த கேள்வி. மழை ஏன் பெய்யவில்லை?

"மேகங்கள் இல்லாததால் மழை பெய்யவில்லை."

"அதுதான் புரிகிறதே! அட அசடே! மேகங்கள் ஏன் திரளவில்லை என்றுதானேகேட்கிறேன்"

இந்தக்கேள்விக்குப் பதில் கூறக் கூடியவர்கள் எவருமேயில்லை. எங்கேக இல்லை? எந்த நாட்டிலுமில்லை. ஆனால் இந்த நாட்டில்?— இதோ பதில். எந்தக்கேள்விக்கும் பதில் சொல்லுமே எங்கள் இந்தியா!

"மேகங்கள் திரளாததற்குக்காரணம் யாகங்கள் செய்யாததே."

"பிராம்மணர்கள் காலா காலங்களில் காயத்திரி ஜெபம் செய்து வருகிறார்களா?"

"ஆஹா! அதற்கென்ன சந்தேகம்! லக்ஷா பிராந்தியும் எருமை நாக்குஊறுகாயும் சாப்பிடும் ஏகாம்பரய்யர் முதல், வைத்திய வரதராஜ அய்யங்கார்வரையில்எல்லாப்பிராமணோத்தமர்களும் காயத்திரி—சந்தியா வந்தனம் தவறாமல் செய்துதான் வருகிறார்கள்.

நமது கடவுள்களுக்கு அபிஷேக—நைவேத்ய—அர்ச்சனாதிகள் சரிவர நடக்கின்றனவா? ஆஹா! அதிலென்னகுறைவு? குப்பனுக்குக் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாவிட்டாலும் கும்பேஸ்வர ஸ்வாமிக்கு இளநீர் அபிஷேகமல்லவா நடைபெறுகிறது!

சரி! இதோ கிடக்கும் வேதபுஸ்தகத்தைப்புரட்டிப் பார்ப்போம். ஏன்? 'வீட்டுக்கொருபிள்ளைவேதம் படிக்க வேண்டும்' என்கிறாரே ஸ்ரீமான் ஆச்சாரியார்! ஆகையால் மழைபெய்வதற்குக்கூட மார்க்கமிருக்குமே அதில். ஆம்! இதோ! இந்த ஸ்லோகம்! "பிராம்மணோத்தமர்கள் வருணஜபம் செய்தால் மாதம் மும்மாரி பெய்யும்!"

* * *

இரயில்கவிழ்ந்ததற்குக்காரணம் கண்டு பிடிக்கப்பட்டது. ஆனால் குற்றவாளி அகப்படவில்லை. குழந்தைஇறந்ததற்குக்காரணம் கண்டுபிடிக்கப்பட்டது; ஆனால் குற்றவாளி—யார்—ஏழுமலையானா,ஹெல்த் ஆபீஸரா—என்பதில் சந்தேகம்பிறந்திருக்கிறது. மழைபெய்யவில்லை; ஆனால் குற்றவாளிகள் யார் யார் என்பதுவிளங்கிவிட்டது. ஆதாரம் என்ன? கேவலம் மனுஷ்யனால்எழுதப்பட்ட எந்தச்சட்டப்புஸ்தகமும் அல்ல. சாக்ஷாத் எம்பெருமானாலேயே சொல்லப்பட்ட (கல்லாலின்கீழிருந்து, நால்வருக்கு—சின்ன விருக்கட்டும்!) வேதமே ஆதாரம்.

இதுவரையில் வருணஜபம் செய்யத்தவறினவர்களா நமது பிராமணோத்தமர்கள் என்பது மாண்டுபோனபிரச்னை. அதைப்பற்றிவீண் அபவாதம் வேண்டாம்! இன்னும் 5, 6 மாதத்திற்குள் மாதம் மும்மாரிபெய்யச் செய்யமுடியுமா?

பிராமண சகோதரர்களே! உங்களுக்கு எதிர்பாராதபடி ஒருசோதனைகாலம் வந்துவிட்டது! தொத்துநோய் பரவும்போதுதானே டாக்டர்களின் திறமைக்குச் சோதனை காலம்! கலகமும் குழப்பமும் குமுறும்போதுதானே, போலீசுக்கும் இராணுவத்திற்கும் சோதனைகாலம். போர் ஏற்படும்போதுதானேவீரர்களுக்குச் சோதனைகாலம்?

சென்றவாரம் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் சேலத்தில்பிராமண மகாநாடு கூட்டினார்களாம்! பிராமணசமுதாயத்தை அசுரர்களிடமிருந்து மீட்பதற்காகவே அவதரித்துச் செங்கோல் நடத்திவரும் ஸ்ரீ சி. பி. இராமனே இம்மகாநாட்டிற்குத் தலைவர் என்றால் "பிராம்மணர்களுக்குப் புதிய சகாப்தம் ஆரம்பம்" என்பதைச் சொல்லவா வேண்டும்.

அந்த மகாநாட்டில் பேசப்பட்ட விஷயங்கள் எவ்வளவோ இருந்திருக்கும். உத்தியோகம், படிப்பு, வியாபாரம், ஆகிய துறைகளில் வேத விற்பன்னர்களின் தோன்றல்கள் வேரூன்றி நிலைக்கும் வழிகளைப்பற்றி ஆலோசிக்கப்பட்டிருக்கும்! பேஷாகச்செய்யட்டும். ஆனால் வருணஜபம் விஷயமும் நினைவிருந்ததோ என்னவோ!

சேலத்தில் கிருஷ்ணனும் இராமனும் ஒன்றுகூடிப்பேசினார்களாம்! தேவர்களைக்காப்பாற்ற ஒரு அவதாரமே போதுமே (புராணப்படி) என்று கேட்காதீர்கள்.

"காலதேசவர்த்தமானத்தைஉத்தேசித்து"மலைமீதுசெல்லும் இரயில் வண்டித்தொடருக்கு இரண்டு எஞ்சின்கள்பூட்டுவதுபோலச் சேலத்தில் இரண்டு அவதாரங்களும் சேர்ந்துவிடின!

ஆகையால் பஞ்சம் பறக்கும் வழியைக்காணவேண்டும்! மழை வேண்டும்! பயிர் பச்சை வளர வேண்டும்!

முதல் தீர்மானம் இப்படி இருந்திருக்குமா?

"தென்னாட்டில் மழையில்லாத காரணத்தினால் பஞ்சம் ஏற்படும் நிலைமைஉண்டாகியிருப்பதால்,பிராம்மணர்களாகிய நாம் இதுவரையில் வருணஜபம் செய்யாதிருந்தது மன்னிக்கமுடியாத தவறு என்ற முடிவு மக்களிடையே பரவி விட்டிருப்பதால், நம்மீது மேலும் பழிபாவம் ஏற்படாதிருக்குமாறு, இன்று முதல் ஒரு மாதத்திற்குள் வருணஜபம் செய்து, இன்னும் 5, 6, மாதங்களுக்காவது மாதம் மும்மாரி பெய்யுமாறு செய்ய வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது."

சரி, தவறினால்; அதாவதுவருணஜபம் செய்யத்தவறினால், வேத—சாஸ்திரங்களை என்ன செய்ய வேண்டும்? பிராமணர்கள் தங்களை என்ன செய்துகொள்ளவேண்டும்? ஒருவேளை வருணஜபம் செய்து மழைபெய்யாதுபோய்விட்டால்?

பொதுமக்களே! தீர்ப்பளியுங்கள்! சிக்கலான கேள்விகள்!


**விளம்பரம்**

உயர்தர க்ஷவரகத்தி,கத்திரிகள், குறைந்த விலையில் கிடைக்கும். எங்கும் ஏஜண்டுகள் தேவை.

தேவைக்கு எழுதவும்:—

S. பசுபதி பிள்ளை,

குரும்பத்தெரு, கரூர்.

(S. I. Ry.)


### எங்கள் குற்றத்தை

1-ம் பக்கத் தொடர்ச்சி

டம்போல் நடக்கிறார்கள். அதில் குற்றமோ, வர்ணாச்சிரமமோ, சிஷ்டாச்சாரமோ, இல்லை. திருவையாறு ஆஸ்டலில்பார்ப்பனப்பையன்களும் மற்றப் பிள்ளைகளும் ஒன்றாகச் சாப்பிட்டால் வர்ணாச்சிரமமும் சிஷ்டாச்சாரமும் கெட்டுவிடுமென்று சங்கராச்சாரியிலிருந்து ஆனரபிள் சீனிவாசசாஸ்திரி வரையிலும் சொல்லுகிறார்களே! ஆதி சங்கராச்சாரியார் விதவையின் மகன்என்று அவருடையபழையசரித்திரத்தில் எழுதியிருக்கிறது. இவர் சமபந்தி போசனம் வர்ணாச்சிரமத்திற்கு விரோதம்என்கிறார். விதவையின் மகன் எந்த வர்ணாச்சிரமத்தைச்சேர்ந்தவன் என்று கேட்டால் அதில் பார்ப்பனர்களைச் சொல்லும் குற்றம் என்ன! பல ஊர்சுற்றி, பல ஜாதியுடன் பலதை உண்டு இனியும் பார்ப்பனராகவே யிருக்கும் சீனிவாசசாஸ்திரியை, திருவையாறு ஆஸ்டல் சமபந்தி போசனம் பார்ப்பன ஜாதியைசப் படி அய்யா தள்ளிவிடும் என்று கேட்டால்,இதில்பார்ப்பனர்களைத் திட்டுவதென்ன? கும்பகோணம் காலேஜில் பார்ப்பனப்பையன்கள் குடிக்கும் தண்ணீர்ப் பானையில் பார்ப்பனரல்லாத பையன் தண்ணீர் மொண்டு குடித்ததற்குப் பெரிய உபாத்தியாயர் ஒருரூபாய் அபராதம்போட்டார். ஐயா! பார்ப்பனஉபாத்தியாயரே!. பார்ப்பனப் பையன்கள் பற்பல தேசங்களில் படிக்கிறார்கள். அங்கே பார்ப்பன பையன்களுக்கு என்று தனியாகத் தண்ணீர்ப்பானையில்லை. எல்லாம் ஒரே எச்சில் பானைதான். சோடா, சாராயம், சூப்பு தாழ்ந்த ஜாதிக்காரர்களின் பானைதானேஉண்டாக்குகிறது? அதைக் குடித்தவர்களையும், குடிக்கிறவர்களையும், பார்ப்பன ஜாதி உதறித்தள்ளியா விட்டது? ஐயா உபாத்தியாயரே! நீங்கள் உங்கள் இடத்தைவிட்டு அன்னிய இடத்தைப்பிடித்ததினால் பிரஷ்டன் ஆனீர்கள். மிலேச்ச பாஷையைப் படித்ததினால் சண்டாளன் ஆனீர்கள்என்றுஉங்கள்வேதஸ்மிருதிகள் சொல்லுகின்றன என்று நாங்கள் சொல்வது அவர்களைத் திட்டுவதா? புத்தியில்லாதவன், மடையன்,மூளையில்லாதவன் என்றுகாட்டுவதற்காகச்சின்னத்தலை பெரியஉடம்பாகப் பத்திரிகையில் படம்போட்டுப்பரப்பினார்களே. அப்பொழுதும் நாங்கள் என்ன சொன்னோம்? எங்களையேதான் குற்றம் சொல்லிக் கொண்டோம். ஆலோசனையற்ற சின்னத்தலையை உடையவர்களே! உங்கள் லௌகிக வாழ்க்கையின் உயர்வுக்குப் பார்ப்பனன் மந்திரமும், உங்கள் மரணத்திற்குப்பின் நீங்கள் இருப்பதாக நினைக்கும் மோட்ச நரகப்பட்டணங்களின் அதிகாரமும், உங்கள் முன்னோர்கள்போகும் மோட்சவாசல் சாவியும் பார்ப்பனரிடம் இல்லையப்பா! அந்த ஏமாற்றை நீங்கள் தெரிந்து கொள்ளுகிறவரையிலும் சின்னத்தலை, சின்னத்தலைதான் என்று சொன்னோம். எட்டிலிருக்கிறதே என்றுசொல்லுகிறார்களேஎன்றால்,

(8-ம் பக்கம் பார்க்க)


**ராஜம் விலாஸ்**

கைத்தறி ஜவுளிகள் -:- கலர் புடவைகள்

உயர்தர ரகங்கள்! உத்தரவாத ஜரிகை!!

80, 100 கௌ. நூல்களால் தயாரிக்கப்பட்டவை!

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

ராஜம் விலாஸ்,

சின்ன ஸௌராஷ்டிரா தெரு, உறையூர் P.O. திருச்சி.

# சீக்கியர் தனிநாடு கேட்கின்றனர்

“இந்தியர்” என்ற மயக்கமொழியை, அரசியல் அமைப்புக்கான வழியாகக் கொள்ள மறுத்து, திராவிடர், முதலில், தனிநாடு கேட்டனர்.

திராவிடர் தனி இனம்; தனிநாடு தேவை; தனியாட்சி தேவை; என்று கேட்டனர். மற்றவர் எள்ளி நகையாடினர் — இன்றும் “வேண்டாம் இந்த யோசனை” என்று போதனைபுரிகின்றனர்

இஸ்லாமியர், பாகிஸ்தான், கேட்டனர். பஞ்சமாபாதகத்திலும் மிஞ்சியது இக் கோரிக்கை, என்று கண்டித்தனர். இன்றும் கண்டித்தே வருகின்றனர்.

“எல்லோரும் இந்தியரே—நமக்குள் ஏது இனபேதம்? அகண்ட இந்துஸ்தானமே நமது இலட்சியம். நாடு துண்டாடப்படக்கூடாது. தனித்தனி இனம் என்ற உணர்ச்சியும், தனிநாடு கேட்கும் போக்கும் கூடாது” என்ற பொதுப் பாடலிலே, இதுவரை, பாஞ்சாலத்து வீரமரபினராம், சீக்கியர்கள் கலந்து கொண்டிருந்தனர். பாகிஸ்தானுக்குநாங்கள் ஒப்புக்கொள்ளமாட்டோம், என்று கூறினர்.

இன்று! சீக்கியர், “நாங்கள் ஓர் தனிஇனம்—எங்களுக்குத் தனிநாடு தேவை” என்று கூறி விட்டனர். இந்தியா இந்தியருக்கு— அகண்ட இந்துஸ்தானம்—நாடுதுண்டாடப்படக்கூடாது என்ற பேச்சு, சீக்கியருக்குத் திருப்தி அளிக்கவில்லை. இதற்காகக் காங்கிரஸ் எடுத்துக்கொண்ட பிரயாசையும் பலனளிக்கவில்லை. அகண்ட இந்துஸ்தானத்திலே, இருக்க, இஸ்லாமியர் மட்டுமல்ல சீக்கியரும் சம்மதிக்கவில்லை. சீக்கியர், தனிநாடு கேட்கின்றனர்

“சீக்கியமார்க்கம், கலாசாரம், பழக்க வழக்கங்கள், சுயமரியாதை, சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாத்துக்கொள்ள சீக்கியர்களுக்குத் தனியாட்சி உரிமையுள்ள தனிநாடுதேவை, சீக்கியர் தனி இனம்” என்ற கருத்தை வலியுறுத்திப் பேசினதுடன், சீக்கியருக்குத் தனிநாடு தேவை, என்ற தீர்மானத்தையும் நிறைவேற்றினர், சீக்கியர் மாநாட்டுத்தலைவர், ஜமேதார், மோகன்சிங்.

மாநாடு, லாகூரில், மார்ச் 9-ந்தேதி நடைபெற்றது. தனிநாடு தேவைஎன்ற தீர்மானம் ஏக மனதாக நிறைவேற்றப் பட்டது. இந்தக் கோரிக்கையை, இங்கு வரஇருக்கும் பிரிட்டிஷ் மந்திரிகளிடம் வற்புறுத்துவது, என்றும் தீர்மானிக்கப் பட்டது. எந்த லாகூரில், பாகிஸ்தான் தேவை என்று தீர்மானிக்கப்பட்டதோ. அதே இடத்திலே சீக்கியஸ்தானம்தேவை என்று இப்போது தீர்மானிக்கப் பட்டது.

பத்துக்கோடிபேர், முஸ்லீம்கள். அவர்கள் தங்களுக்கு ஒருநாடு தேவை, என்று கேட்டனர்—கேலிசெய்தனர் — கண்டித்தனர்—இதேசீக்கியர்கள்.

சீக்கியர்களின் எண்ணிக்கை சுமார் 40-இலட்சம்! இவர்கள் இன்று தனி நாடுகேட்கின்றனர்.

“இஸ்லாமிய, மதம், கலாச்சாரம், பழக்க வழக்கங்கள், தனியானவை, அவை தனி ஆட்சியின் மூலமாகத்தான் பாதுகாக்கப்படமுடியும், எனவே, நாங்கள் பெருவாரியாக உள்ள மாகாணங்களைத் தொகுத்துத் தனிநாடு என்றமைத்துத் தாருங்கள்” என்று முஸ்லீம்கள் கேட்டனர்; அதுதவறு என்று கண்டித்தனர் இந்துக்கள்; அந்தக் கண்டனத்திலே, தமது ‘குரலை’யும் உதவிக்குத்தந்தனர் சீக்கியர். இன்றோ, நாங்கள் தனிஇனம். எங்கள் மதகலாச்சார வாழ்வுக்குப் பாதுகாப்பு வேண்டும்; அதற்குத் தனிநாடு தேவை, என்று சீக்கியரே கூறுகின்றனர்.

40—இலட்சம் சீக்கியருக்கு, இந்த உணர்ச்சியும், அக்கறையும், சுயமரியாதையும் இருக்கும் போது 4-கோடி திராவிடரும்பத்துகோடி முஸ்லீமும், உணர்ச்சியால் உந்தப்பட்டுத் தனிநாடுகேட்பது எந்த விதத்திலே தவறு?

முஸ்லீம்கள், பாகிஸ்தான் கேட்கின்றனரே, என்ற கோபத்தால், சீக்கியர் இது போல் பேசுகின்றனர்; சீக்கியரும் கேட்கின்றனர்; இனி, கண்டவர்களும் கேட்பார்கள்; இப்படித்தனிநாடு கேட்டவர்களுக்கெல்லாம், சரி, சரி, என்றுகூறிக் கொண்டே போனால், இந்தியா என்ன ஆகும்? சிறுசிறு துண்டுகளாகி விடுமே, என்ற பயமூட்டும் பேச்சைக் கூறுவதற்காகவே, சீக்கியஸ்தானம் கேட்கப்படுவதாகக் கூறப்படக்கூடும். அதாவது, பாகிஸ்தான், திராவிடஸ்தான் கோரிக்கைகளைத் தாக்குவதற்கு, சீக்கியஸ்தான் கோரிக்கையைக்கூட ஒரு கருவியாகக் காங்கிரசார் உபயோகிக்கக் கூடும். அது பலன் தருமா என்பது கிடக்கட்டும்; தனி இனம்என்ற உணர்ச்சியும், தனிநாடு தேவை என்ற வேட்கையும், தேசத்துரோகிகள், பிரிட்டிஷ்கூலிகள்—ஏகாதிபத்தியதாசர்கள்,— ஆகியோருக்கு —ஏற்பட்டுள்ள பித்தம் என்று கூறினர். காங்கிரசை ஆதரித்தும், லீகை எதிர்த்தும் வந்த வீரமரபினராம் சீக்கியரும், தனி இனம், ஆகவே தனிநாடு தேவை என்பதைப் பேசுவதால், அவர்களையும் இனி அந்தப்பட்டியிலே முதலில் காங்கிரசார் பொறிக்கவேண்டும். பட்டி, வளருகிறது!

“பிரிட்டிஷ் மந்திரிகளிடம், சீக்கியர் கோரிக்கையைக் கூறி, முஸ்லிம், திராவிடர் மட்டுமல்ல சீக்கியரும், தனி நாடு கேட்கின்றனர் இவ்விதம் பலபேர் கேட்பதால், ஒருவருக்குக் கொடுத்து மற்றவருக்குக் கொடுக்காதிருக்க முடியுமா, ஆகவே ‘தனி நாடு’ கொடுப்பது என்ற திட்டமே கிடையாது என்று தெரிவித்துவிடுக என்று காங்கிரசார் கூறக்கூடும்.

பிரிட்டிஷ் மந்திரிகள், என்ன முடிவு செய்கிறார்களோ, அதுவேதான் கடைசி முடிவு என்பதில்லை!

“தனி நாடுகள்” கேட்பவர்கள் தேசத்துரோகிகள், என்ற பொதுமொழி பொய்யாக்கப்பட்டுவிட்டது. அதுதான், சீக்கியர் தனிநாடு கேட்பதனால் விளையும் முதல்பயன்.

‘தனி நாடு’ கேட்கும் உரிமை யாருக்கும் இருக்கிறது; தனி இனம் எனும் உணர்ச்சி எழுந்தால், தனி நாடுகேட்கத்தான் செய்வார்கள், என்ற அடிப்படை உண்மைகளை, லாகூரில் கூடிய சீக்கியர் மாநாடு தெரிவித்து விட்டது. இதுவும் முக்கியமான பலனளிக்கும்.

பிறகு ‘தனி நாடு’ நிர்வகிக்கும் வகை அதற்கேற்ற மக்கள் எண்ணிக்கை, நாட்டு வளம், என்பனபோன்ற பிரச்சனைகள் உள்ளன. அவைகளை ஆராய்ந்த பிறகே தனி நாடு கோரிக்கைக்கு யாரும் சம்மதிக்க முடியும். அந்த முறையிலே பார்த்தால், பாகிஸ்தான கேட்கும் முஸ்லிம்கள் பத்துக்கோடி, சீக்கியஸ்தான் கேட்பவர்கள் 40 இலட்சம்! பாகிஸ்தான் கேட்பவர்கள், எல்லைப்புறத்திலிருந்து அசாம்வரையிலே, பெருவாரியான மக்கள், சீக்கியரோ, பாஞ்சால மாகாணம் ஒன்றில் மட்டுமே உள்ளவர், அங்கேயும் அவர்கள் சிறுபான்மையினரே எண்ணிக்கையில். ஒரு மாகாணத்தில் சிறுபான்மையினராக உள்ளவர்கள் தனி நாடு கேட்பது நியாயமா,? என்பது யோசிக்கப்படவேண்டிய விஷயம்.

இந்திய உபகண்டத்தில் 40 கோடி மக்கள், இதிலே 10 கோடி முஸ்லிம்கள் சீக்கியர் 40 இலட்சம்.

பாஞ்சாலத்தில் சீக்கியர் இருக்கும் அளவுக்கு, பாகிஸ்தானில் சேர்க்கப்படாத பிரதேசங்களில், முஸ்லிம்கள் இருக்கின்றனர், தனிநாடோ, தனிஆட்சியோ கேட்காமல். பண்டித ஜவஹரின் பீடமான ஐக்கிய மாகாணம் பாகிஸ்தானில் சேர்க்கப்படவில்லை, ஆனால் ஐக்கிய மாகாணத்தின் மொத்த ஜனத்தொகை.

**55,020,617.**

இதில் முஸ்லிம்களின் எண்ணிக்கை,

**8,416,308.**

அதாவது 15.3%

பாஞ்சாலத்தின் மொத்த ஜனத்தொகை

**28,418,819**

இதில் சீக்கியரின் ஜனத்தொகை

**3,757,401**

அதாவது 13.2%

ஐக்கிய மாகாண ஜனத்தொகையில் 100-க்கு 15 பேர் என்ற அளவிலே உள்ள முஸ்லிம்கள், ஐக்கியமாகாணத்தை இந்துஸ்தானில் சேர்க்கவும், அதிலே தாங்கள் சிறுபான்மையினராக வாழவும் இசைகின்றனர். ஆனால் பாஞ்சாலத்திலே 100-க்கு 13 பேர், என்ற அளவிலே உள்ள சீக்கியர், தங்களுக்குப் பாஞ்சாலத்திலே தனி நாடு தேவை என்று கேட்கின்றனர்,

பாஞ்சாலத்தில் மட்டுந்தான் சீக்கியர்கள், 100-க்கு 13 என்ற அளவாவது உள்ளனர், மற்ற மாகாணங்களை எடுத்துக்கொண்டால், மொத்த ஜனத்தொகையில் மிக மிகக் குறைந்த அளவு தான் உள்ளனர்.

பாஞ்சாலம் என்ற ஒரே மாகாணத்தில் மட்டுமே குறிப்பிடத்தக்க அளவிலே வாழ்பவர்களும், அங்கும் மொத்த ஜனத்தொகையில் 100-க்கு 13 என்ற அளவு மட்டுமே உள்ளவர்களுமான சீக்கியர்கள், நாங்கள் தனி இனம், எங்களுக்குத் தனி நாடு தேவை என்று கூறுகின்றனர். இதிலிருந்தாவது, இந்தியா இந்தியருக்கே என்ற இலட்சியம் இன எழுச்சியை மாய்க்கவோ, மறைக்கவோ கூடியதல்ல என்பதைக் காங்கிரசார் உணருவார்களாக.

## திருமணம்

செஞ்சி சத்தியமங்கலம் அ. மகாதேவ நாயகி அம்மையாருக்கும் தஞ்சை குற்றாலம் தோழர் ப. சுப்பராயருக்கும் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது அதன் ஞாபகார்த்தமாக குடியரசு, திராவிட நாடு, சாக்கோட்டை சமதர்ம வாசகசாலைக்கு தலா ஒரு ரூபாய் அனுப்பப் பட்டது.


·WANTED

Candidates for undergoing training in the Y. M. C. A. College of Physical Education Saidapet Minimum Educational qualification S. S. L. C. (Eligible) Applications furnishing caste age qualification etc, should reach the undersigned on or before 31—3—1946. Candidates with good Physique alone need apply. Preference will be given to Secondary grade trained candidates

Chinglepet Dt. Board Office, Saidapet, 12—3—1946

Sd T. Shunmugam, President.


# திறந்த மடல்

காமகோடி சங்கராச்சாரியார்,
கும்பகோணம்.

**பார்ப்பன குருவே!**

தாங்கள் சேலத்தில் நடைபெற்ற பார்ப்பன மாநாட்டுக்கு வாழ்த்துக் கூறியிருக்கும் செய்தியில், பிராமணனையும், பசுவையும் காப்பாற்ற வேண்டியதே ஒவ்வொரு இந்துவின், இந்து மதத்தின் தாமம்என்று குறிப்பிட்டிருக்கின்றீர்கள். தாங்கள் இவ்வாறு வெளிப்படையாகக் கூறியதற்கு வணக்கம். இந்துமதம்பார்ப்பன சமுதாயத்தின் வாழ்விற்குமட்டுமே பயன்படுத்தப்பட்டு வருவதால்தான் இந்நாட்டின்பழங்குடிமக்களும், இந்நாட்டை ஆண்டுவந்த, இந்நாட்டுக்கு உரிமையுடைய திராவிட இனம் அந்த இந்து மதத்திலிருந்து விடுபட்டுத் திராவிட இனப்போராட்டத்தைநடத்திவருகின்றது தலைவர் பெரியார் ஈ. வே. இராமசாமி அவர்கள் வகுத்துள்ள திட்டத்தை அடிப்படையாகக்கொண்டு.


தவிர, இந்துமதம் என்பதும் இந்திய நாடு என்பதும் இந்நாட்டுக்குப் பிழைக்க வந்த சிறு சுயநலகூட்டமாகிய தங்களின் பார்ப்பன ஜாதியினரின் சூழ்ச்சியேயாகும்.

எனவே இனி எவ்வகையிலும், அதாவது திருவாங்கூர் திவானைப்போன்ற ஆயிரத்தெட்டு வி. பி. கள் வந்துதோள் கொடுத்து இந்துமதத்தை திராவிடநாட்டில் நிலைத்து வைக்க முயற்சிசெய்தாலும் திராவிடனின் தோள்வலிமையிடம் ஒன்றும் செய்யமுடியாது. இதை உணர்ந்தே தான் தலைமை வகித்த சர். வி. பி. ராமசாமி அய்யருங்கூட இந்நாட்டில் பிராமணர்கள் யூதர்கள் போன்று கஷ்டப்படுகின்றனர் என்று ஓலமிட்டிருக்கிறார். ஆனால் உண்மையிலேயே அந்த நிலை இன்றுபார்ப்பனருக்கு இல்லையெனினும் பரங்கியர்கள் இந்நாட்டைவிட்டு வெளியேறியதும், பார்ப்பனர்கள் அவ்விதம் நடத்தப்படுவார்கள்என்பதையுணர்ந்தே சர். வி. பி. கூறியிருக்கிறார்.

அவ்வித நிலைமை பார்ப்பனர்களுக்கு வாராதிருக்கவேண்டுமானால் வெள்ளையனே வெளியேறு என்றுகூறிக் கொண்டிருப்பதோடு வெள்ளையர்களுடன் அவர்களின் ஆதிக்கத்திற்கு உதவி வந்த பார்ப்பனியமும் வெளியேறிவிடுவதுதான் நேர்மையும் ஒழுங்குமாகும். அதைவிடுத்து வி. பி.க்கள் தலைமையில் மாநாடுகள் கூட்டி விடுவதால்மட்டும் பயன் ஒன்றுமில்லை. அல்லது திராவிட ஆட்சிமன்றத் தலைவர்களால் கொடுக்கப்படும் உரிமைகளுடன் வேண்டுமானால் இந்துக்கள் இந்நாட்டில்வாழலாம். இனியும் இந்துக்களுக்காக மற்ற இனத்தவர்கள் உழைக்கவேண்டும் என்று தங்களைப் போன்றவர் தர்மோபதேசம் செய்யமுன் வருவது வீண்வேலையே யாகும். தங்களின் இந்துமத தர்மத்தின் உயர்வை வேண்டுமானால் பழையபடி சிந்து நதிக் கரையோரத்திற்குத் தங்களின் “கும்பலோடு” சென்று செய்துகொள்ளுங்கள் திராவிடநாட்டில் இனி ஆரிய மதமும், மதஸ்தாபகர்களும் — குருக்களும், ஆச்சாரியர்களும், சாஸ்திரம், மதம், கோயில், கடவுள், உயர்ஜாதி என்ற போரால் வாழ்ந்துவர முடியவே முடியாது என்பதைத்தாங்களும், தங்களுடைய சிஷ்ய கோடிகளும், தங்களின் வருப்பாரும் உணர்ந்து அதற்கேற்ப நடவுங்கள்.

கூத்தரசன்.

(அடுத்த பக்கம் பார்க்க)

ஜெயராம்காயசுத்திலேகியத்தைச் சாப்பிடுங்கள்
தலைவலி, மயக்கம், வாந்தி, நெஞ்சுவலி,
வயிற்றுவலி, புளித்தேப்பம், வயிற்றுப்பிசம்,
துடல்வாதம், இடுப்புவலி, மூலநோய்,
இவைகளைப்போக்கிமலத்தைச்சுகமாய்ப்பிரிக்கும்

அற்புத சஞ்சீவி
ஜெயராம் காயசுத்தி லேகியம்
1-சேர் ரூ. 4. ½-சேர் ரூ. 2—2—0.
வி. பி. பி. வேறு.

ஜெயராம் வைத்தியசாலை,
28, காசிவிஸ்வாநாதர் மேல்வீதி, கும்பகோணம்.

எமது சோல் ஏஜண்ட்:—
M. E. அப்துல் ரகிமான் சாகிபு, புகையிலை வியாபாரம்.
பெரிய கடைவீதி, திருவண்ணாமலை.

## தோழர்களுக்கு

இப்போது எனக்கு ஏற்பட்டிருக்கும் உடல் நலக்குறைவு, இன்னும் சிறிது காலத்துக்கு வெளியூர்போக முடியாத நிலைமையில் இருப்பதால், மதுரை, தென்னாற்காடு ஆகியவட்டாரங்களில் இருந்து வந்தஅழைப்பையும்,மற்றும்தோழர்களின் அழைப்பையும்உடனேநிறைவேற்றிவைக்கமுடியாமைக்குப்பெரிதும் மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

**அண்ணாத்துரை**


# திராவிட நாடு

காஞ்சி 17—3—46 ஞாயிறு


## தங்கவயலில்

★

தங்கம் விளையும் வயல், அங்கு தரித்திரம் தாண்டவமாடுகிறது, தொழிலாளர் உலகில். மிகவும் முற்போக்கானது என்று பெயர் பெற்றுள்ள மைசூர் சமஸ்தானம், கோலார் தங்கச் சுரங்கத்தை ஒரு வெள்ளைக்காரக் கம்பெனியிடம் ஒப்படைத்து விட்டு, தன் வரையில் கணிசமான பலன் பெற்றுக்கொண்டு, சுரங்கத் தொழிலாளர்களைக் கம்பெனி எந்த விதமாக வேனும் நடத்திக்கொள்ளட்டும் என்று கவலையற்றுக் கிடக்கிறது. வெள்ளை முதலாளிகளுக்குக் கோலார் இலாபவேட்டைக்காடாகி விட்டது, தொழிலாளர் வாழ்வு, பரிதாபகரமாகிவிட்டது. அந்தத்தொழிலாளரில்முக்கால்வாசிப்பேர்தமிழர், பழங்குடி மக்கள். பலஆயிரம்அடி, பூமிக்குஅடியேசென்று, தங்கத்தை வெட்டி எடுத்துக் கொண்டுவந்து முதலாளியிடம் கொடுத்துவிட்டு, தரித்திரத்தால்பீடிக்கப்பட்டவாழ்க்கையிலே அந்தத் தோழர்கள்உள்ளனர். கம்பெனிக்குப் பலகோடி ரூபாய் இலாபம். மைசூர் சமஸ்தானம் இதிலே ஆண்டு தோறும் இரண்டுகோடி ரூபாய்க்கு மேல் பெற்றுக்கொள்கிறது. தன் வயிறு நிம்பியதும், சமஸ்தானம் திருப்தி அடைந்து தொழிலாளர்களைக் கம்பெனி எவ்விதமாகவேனும்நடத்திக் கொள்ளட்டும் என்று விட்டுவிட்டது. தங்களுக்குக் கூலி போதாது, என்ற கிளர்ச்சியைத் தொழிலாளர்கள், மிகச் சாந்தமான முறையிலே, பல நாட்களாக எடுத்துக் கூறிவந்தனர். தொழிலாளர்களிடையே ஒற்றுமையும் கட்டுப்பாடும் இருக்கிறது. கோலார் சுரங்கத் தொழிலில் ஈடுபட்ட, சகலதொழிலாளர்களும், இந்தச்சமயம் ஒன்றுபட்டுள்ளனர். கோலார் பகுதியிலே உள்ள, சகல தொழிலாளர் ஸ்தாபனங்களும், ஒருமுகமாக உள்ளன. இவ்வளவும், கம்பெனிக்குத் தெரிந்தும், தொழிலாளரின் கோரிக்கைக்குச் செவிசாய்க்கவில்லை, எனவே, தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். கடந்த ஒரு மாதகாலமாக இந்த வேலைநிறுத்தம் நடந்து வருகிறது, அமளியின்றி. கோலார் தொழிலாளர்கள் மிகத் திறம்பட நடத்திக் காட்டும் இந்த வேலை நிறுத்தம், அவர்களின் மதிப்பை உயர்த்தியிருக்கிறது. அந்தத் தொழிலாளர்களின், வேலையின் தன்மையையும், அவர்களுக்குள்ள ஆபத்துகளையும், அறிந்தவர்கள் அனைவரும், அவர்களுடைய கோரிக்கை நியாயமானது என்பதை ஒப்புக்கொள்வார்கள். கம்பெனியாருக்குக் கவலை எல்லாம் இலாபத்தில். சமஸ்தானமோ, கம்பெனிக்குச் சுயராஜ்யம் கொடுத்து விட்டது! தன் அடிமடியில் கை போடாத வரையிலே, நல்லதுஎன்ற எண்ணத்திலே, வருஷவாரியிலே கிடைக்கும் இரண்டு கோடியை இரும்புப் பெட்டியிலே வைத்துப் பூட்டுவதிலே மட்டுமே கண்ணுங் கருத்துமாக இருக்கிறது.

ஒருமாத காலமாக அந்தத்தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்கின்றனர், என்றால்விளையாட்டல்ல. வேதனையுடன் பல்லாயிரக் கணக்கான மக்கள் உள்ளனர் என்று பொருள். எவ்வளவோ பேருடைய வாழ்வு நொருங்கிவிட்டிருக்கும். இவ்வளவு கஷ்டத்தையும் பொறுத்துக்கொண்டு இருக்க, கம்பெனி, தனக்கு முன்பு கிடைத்தது போல இலாபம் கிடைப்பதில்லை என்று கூறுகிறது. கோலார் தங்கச் சுரங்கத்தின் மூலம் அந்த வெள்ளைக் காரக்கம்பெனி கொழுத்தஇலாபம் அடைந்ததைஉலகம் நன்குஅறியும், அந்தச் சுரங்கத்திலே வேலை செய்ததால்தொழிலாளர்கள் கண்டபலன், தேய்ந்த உடல், நோய், உறுப்புகளின் உருக்குலைவுமுதலியனதான், அவர்களைக்கண்டாலே தெரியும். தொழிலாளர்கள் தங்கள் மாளிகையிலே உள்ள மூன்றுவதுமாடிக்குப் பளிங்குக்கல் அமைக்கப் பணம் கேட்கவில்லை! குடிசையில் படுத்து உறங்கும்போது, பசியால் சிறுகுடலைப் பெருங்குடல் தின்றுவிடாதபடி தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவே, கூலி கொஞ்சம் கூட்டிக் கொடுக்கும்படி கேட்கிறார்கள். கோடி கோடியாக இலாபத்தைக் குவித்துக்கொண்ட கம்பெனியார், ஏழை அழுத கண்ணீரைச் சட்டை செய்வதாகக் காணோம். இவ்வளவுக்கும், தொழிலாளர்கள் கோரிக்கையை ஈடேற்றுவதன் மூலம், கம்பெனிக்கு, மலைபோன்ற அளவு செலவும் இல்லை. அவர்கள் அடையும்இலாபத்தோடு ஒப்பிட்டுப்பார்த்தால், தொழிலாளர்கள் கேட்பது, மிகமிகக் குறைந்த அளவுதான். கோடி கோடியாக இலாபமடித்த கம்பெனியை, நாடி நரம்பு முறியப் பாடுபடும் நமது தமிழ்த் தொழிலாளர்கள், கூலி உயர்வு என்ற முறையிலே கேட்பதெல்லாம், கம்பெனிக்கு 5-இலட்ச ரூபாய்செலவு தான் ஆகும். இதற்கு மனமில்லை, கம்பெனிக்கு. சமஸ்தானமோ, கம்பெனிக்கு வக்கீல் வேலை செய்வதிலேகாட்டுகிற அளவுஆர்வத்தைத் தொழிலாளர் துயர் போக்கக் காட்டக் காணோம். ஒருமாத காலமாக, வேலைநிறுத்தம்நடக்கிறது, கம்பெனி அசைந்து கொடுக்கவில்லை, சமஸ்தானமோ, சட்டத்தையும் சமாதானத்தையும் நிலை நாட்டுவதிலே அக்கரை காட்டுகிறதேஒழிய, ஒருமாதமாகப் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் பட்டினியுடன் போராடி வேலையின்றி வேதனைப் படுகிறதே, இது, சமஸ்தானத்துக்கே கேவலமல்லவா என்று எண்ணக்காணோம். உலகிலேயோ, மைசூர்சமஸ்தானத்துக்குப்பெரியமதிப்பு. இந்தமதிப்பு, கோலார் தங்கவயல் வேலைநிறுத்தத்தின் பலனாக நிச்சயம் குறையும். ஏன், மைசூர் சமஸ்தானம், பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் சார்பிலே பாதுகாவலனாக நின்று, கம்பெனியை ஒழுங்காக நடந்து கொள்ளும்படி கட்டாயப்படுத்தக் கூடாது? ஒரு சில துரைமார்களின் புன்சிரிப்புக்காக, பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களின், கண்ணீரைக் கண்டும் காணாததுபோலிருப்பதா? மைசூர் சமஸ்தானத்திலே, சந்தனக்காடு உண்டு, மின்சார உற்பத்திநிலையம்உண்டு, தொழில்வளம் உண்டு, தங்கம் விளையும் நாடு அது என்று உலகம் படிக்கிறது, மைசூரைப் பாராட்டுகிறது, ஆனால் அதே செய்தியுடன், மைசூரில் அரைப்பட்டினியுடன் அவதிப்படும் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் உள்ளனர் என்பதையும் படித்தால், உலகம் மைசூர் சமஸ்தானத்தைப் பாராட்டவாசெய்யும்? மைசூர்சமஸ்தான நிர்வாகிகள், இதனைக் கூர்ந்து கவனிக்கவேண்டும். சமஸ்தானத்திலே, மன்னரின் மனமகிழ்ச்சிக்காகவும், பொழுதுபோக்கு, விளையாட்டுக்காகவும்வளர்க்கப்படும்குதிரைகள், வேறுபல மிருகங்கள், பூந்தோட்டங்கள் ஆகியவைகளுக்குச் செலவிடப்படும் தொகையைவிட, தங்கத்தை வெட்டி எடுத்துத்தரும் தொழிலாளர்களின் வாழ்க்கைக்காகச் செலவிடப்படும் தொகை, குறைவு! சமஸ்தானம் இதனை மறுத்தலாகாது. தொழிலாளரின் துயரைத் துடைக்க விரைந்து முன்வர வேண்டும். அப்போதுதான், சமஸ்தான மன்னர், மக்களின் பாதுகாவலர் இருக்கிறார் என்றபெயர் பொருந்தும், இல்லையேல், இத்தகைய சமஸ்தானாதிபதிகள், ஏகாதிபத்யக் கண் காட்சிச் சாலையின் சொகுப்பொம்மைகள், என்றஎண்ணம் உறுதிப்படும். மைசூர் தன் நல்ல பெயரைக் காப்பாற்றிக் கொள்ள முன்வருதல் வேண்டும். தொழிலாளர் வாழ்க்கையிலே இப்படி வறுமைத்தேள் கொட்டும் படிச்செய்துவிட்டுப் பிறகு, அவர்கள் கட்டுக்கு அடங்குவதில்லை வேலை நிறுத்தம்செய்து தொழில் பெருக்கத்தை கெடுக்கிறார்கள் — கலவரம் செய்கிறார்கள்—என்று குறைகூறுவதும்,சரியாகுமா? ஒருமாத காலமாக, வேலைநிறுத்த வேதனையைச் சகித்துக்கொண்ட தோழர்களின் மன உறுதியையும் பண்பையும் நாம் பாராட்டத்தான் வேண்டும். ஆனால் இந்த அமைதி என்றும் நிலவும் என்று சமஸ்தானம் எண்ணுவது ஏமாளித்தனமாக முடியும். பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு. அதைத் தாண்டும் நிர்ப்பந்தத்தைத் தொழிலாளருக்கு ஏற்படுத்தாது, அவர்களின் குறைகளைக் கவனிக்கவேண்டும். கிளர்ச்சி செய்தால் இருக்கவே இருக்கிறது, குண்டு, என்று கருதுவதானால், அறிவு உலகம் அந்தப் போக்கைக் கண்டித்தே தீரும். கோலார் தங்கவயல் தோழர்களின் துயரைக்கேட்டுத்,தமிழகம் மிகவும் மனம் வருந்துகிறது. ஆங்காங்கு உள்ள, திராவிடர் கழகங்கள், கோலார்தங்கவயல் தோழர்களின் குறையை நீக்கும்படி, மைசூர் சமஸ்தானத்தைக் கேட்டுக் கொள்ள வேண்டும். தீர்மானங்களைச் சமஸ்தானத்துக்கு அனுப்ப வேண்டும். தந்திகள், மைசூர் சமஸ்தானத்துக்கு அனுப்ப வேண்டும். பல்லாயிரக்கணக்கான அந்தப் பாட்டாளிகளின் பக்கத்திலே தமிழகம் நிற்கிறதுஎன்பதைச்சமஸ்தானம்உணரும் படிச் செய்யவேண்டும்.

## வேண்டுகோள்.

திருச்சி ஜில்லா திராவிட கழகங்களுக்கும், நண்பர்களுக்கும்!

நம் ஜில்லாவில் இவ்வாண்டிற்கு 10,000 அங்கத்தினர்களும், ரூ. 5000 நிதியம் சேர்ப்பதென்றும் முடிவு செய்துள்ளோம்.

ஜில்லாவிலுள்ள எல்லா திராவிட கழகங்களும் மேற்படி விஷயங்களுக்கு முயற்சி செய்து வெற்றி பெறுமாறு கேட்டுக் கேட்டுக்கொள்கின்றேன்.

அங்கத்தினர் சேர்க்கும் விஷயத்தில் திருச்சி ஜில்லாதான் முதன்மைஸ்தானம் பெறவேண்டுமென எல்லா திராவிட கழகங்களிலுள்ள காரியதரிசிகளை கேட்டுக்கொள்கிறேன். அங்கத்தினர்களைசேர்க்கும் ரசீது புத்தகங்கள் வேண்டுபவர்கள் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதி பெற்றுக் கொள்ளவும்.

சென்ற ஆண்டு அங்கத்தினர்களாக சேர்ந்தவர்களும் இவ்வாண்டு புதிதாக அங்கத்தினராக சேர்ந்து கொள்ளவும்.

உறையூர்,
15—3—46.

**M. நடராஜன்,**
காரியதரிசி,
திருச்சிஜில்லா திராவிடர் கழகம்.
சோழங்கநல்லூர்,
சோமரசம்பேட்டை P.O. திருச்சி.

## திறந்த மடல்

3-ம் பக்கத் தொடர்ச்சி

தோழர் நாஸு,
பார்ப்பனர் மாநாடு, சேலம்.

**வ. க. தலைவரே!**

தங்களது உரையில் பிறப்பின் காரணமாக கல்லூரிகளில் இடம் அளிக்க மறுக்கப்படுவது வருந்தத்தக்கது என்று கூறியிருக்கின்றீர்கள். இதை ஏன் வற்புறுத்திக் கூறியிருக்கின்றீர் என்பது அனைவரும் அறிந்ததேயெனினும், இவ்வாண்டு கல்லூரிகளில் இடம் இல்லாததால் ஒரு சில பார்ப்பனர்களுக்கு மட்டும் இடம் இல்லாத ஒரு காரணத்திற்காக இவ்வாறு புலம்புகின்றீரே, இது தகாது என்று கூறுகின்றீரே, ஆனால் இந்நாட்டு பழங்குடி மக்களான தாழ்த்தப்பட்ட வகுப்பார்பள்ளிக்கூடம் சென்றாலோ அல்லது கல்வி கற்க வேண்டுமென்று மனத்தால் நினைப்பதோ பெரிய பாபமான காரியமாகும் என்று பார்ப்பனர்களால் "சாஸ்திரம்" எழுதி வைத்து அச்சமூகத்தினரை மாக்களாக வஞ்சித்து வருகின்றீரே! இதைப்பற்றித் தங்கள் அறிவில் ஒன்றும் எட்டவில்லை போலும். இது பாபமான காரியமில்லையா? இதைப்பற்றிநீர்ஏன் இன்றையவரை கவலைப்படவில்லை. ஆரிய ஜாதி வெறி அவ்விதத் தன்மையாயிருந்தால், பின் ஏன் அந்த ஜாதியினரை யூதர்கள் போன்று பிற சமூகத்தினர் நடத்த முற்படமாட்டார்கள்! இது குற்றமும் ஆகாதே! தவிர தங்கள்உரையில் ஸர்.வி.பி.யை சிறந்த தேச பக்தர் என்றும் கூறியிருக்கிறீர்கள். நிஜந்தானே "தேசத்தலைவர்" ஆகிய காந்தியாரை முட்டாள் என்று கூறிய சர். வி. பி. க்கு தேசபக்தர் பட்டம் ஏன் கிடைக்காது? அவர் தான் பிறவியில் பார்ப்பனர் ஆச்சே? ஆகஸ்டு துரோகி ஆச்சாரியாருக்கு காந்தியார் ஆசீர்வாதமும் குற்றமற்ற காமராஜருக்கு காந்தியார் கடுஞ்சொல்லுந்தான் நியாயம்என்றிருக்கும்போது, சாதாரணமாக உங்களைப்போன்றாரிடம் வேறு என்ன எதிர்பார்க்க முடியும்!

**கூத்தரசன்.**

●

சர். பி. டி. இராசன்,
சென்னை.

**ஞானோதய வீரரே!**

தாங்கள் சென்ற ஞாயறன்றுசென்னை மெம்மோரியல் மண்டபத்தில் சொற்பொழி வாற்றுகையில், ஜஸ்டிஸ்கட்சி இனி தேர்தலில் கலவாது, காங்கிரசிடமே அதிகாரத்தைக் கொடுத்துவிட்டு பிரிட்டிஷார் வெளியேறி விட்டும் என்று கபர்தார் செய்திருக்கிறீர்கள்.

முட்டியபின் குனிதல் என்பதுபாங்கியருக்கும்—பார்ப்பனருக்கும் சொந்தம், தாங்களும் பாங்கியர்—பார்ப்பனியபக்தராகஇருந்து வருவதால் அதேநிலை தங்களுக்கும் இன்றுவரை இருந்து வந்தது ஆச்சரியமல்ல. ஜஸ்டிஸ்கட்சித் தலைவர் பெரியார் அவர்களும் ஜஸ்டிஸ்கட்சியும் தேர்தலில் கலந்துக்கொள்ளவேண்டாம் என்று கூறியபோது, "பட்டேக்கள்" போன்று டெல்லிசட்டசபைத்தேர்தலில் நின்று மூக்கறுபட்டு, இன்று 'என்ன செய்வேன் நான்" என்று முகாரி ராகத்தில்பாடுகின்றீர். பாபம் தங்கள் கோஷ்டியின் காரியதரிசி தங்களையும்மீறி சென்னையில் ஒரு தொகுதிக்கு நாமிநேஷன் செய்துவிட்டு, "சிதம்பரஇரகசியம்" இராயப்பேட்டையில் நடைபெற்ற பின்னர் வெற்றிகாமானவாபஸ்பெற்றாராம்' அதுவரை அந்த அபேட்சகருக்கு அதுவும் காரியதரிசியாயிருப்பவருக்குக் கட்சித்தலைவர் கட்டளைத்தெரியவில்லையாம், வாபஸ் வாங்கும்போது அந்தபேர்வழி விடுத்த அறிக்கையில், தலைவர் அறிக்கையின்படி வாபஸ் பெறுகிறேன் என்று கூறியிருக்கிறார். ஒருகட்சிக்கு முக்கிய உயிர் காரியதரிசியேயாகும், ஆனால் உங்கள் கோஷ்டியின் காரியதரிசிக்கு, 'சிதம்பர இரகசியம்" உயிர் என்று கூறுகின்றனர். இன்னும் இரண்டொருவர் தங்கள் பேச்சை மதிக்காது வேறுபெயரால் தேர்தலுக்கு நிற்கிறார்கள். எனவே தாங்கள் இன்னும்வீணைக்கொள்கையில் உறுதியற்ற பேர்வழிகளை நம்பியிருப்பதைவிடுத்து தாங்களும் வெற்றிகாமாக வாபஸ் பெற்றுத்திராவிடர் இயக்கத்தின் மணியாகவிளங்கவேண்டுகிறேன். வாட்டு ஜம்பத்தால் பயன் இல்லை.

**கூத்தரசன்.**

# அலுவலகத்தில் வாதம்

திருவாளர் சாந்தமூர்த்தி, பார்ப்பனரல்லாதார் இயக்கப்பற்றுள்ளவர். காங்கிரசின்போக்கு பிடிக்காது என்ற அளவோடு இருப்பவரல்ல, ஏகாதிபத்ய எதிர்ப்பு நமது கட்சிக்குக் கூடாது என்ற மனப்பான்மை கொண்டவர். பார்ப்பனரல்லாதாருக்குப் பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் தேவையுமில்லை, அதனை எதிர்க்க வேண்டிய அவசியம், பார்ப்பனருக்கோ மற்றவர்களுக்கோ இருப்பதைவிட, நமக்கே அதிகம் என்ற நோக்கம் அவருக்குக் கிடையாது. அதாவது பழைய S. I. L. F. மனப்பான்மை. அவருக்குத் "திராவிட நாடு" கடந்தகிழமை வெளியிட்ட தலையங்கம், ஏகாதிபத்ய எதிர்ப்பு உணர்ச்சியுடன் இருப்பது கண்டு ஆச்சரியமும் அச்சமும் ஏற்பட்டு, அலுவலகம்வந்து வாதிட்டார். அந்த உரையாடலின் தொகுப்பு இது.

அவர் சற்றுக் கோபமாகவே இருந்தார்—வழக்கத்துக்கு மாறாக. நானோ வழக்கம்போலவே அவரை வரவேற்று உபசரித்தேன். கண்டதும், பேசப்போகிறார் என்பதைத் தெரிந்து கொண்டேன். புயல்கிளம்பிற்று!

"என்னதம்பீ! இப்படி எழுதிவிட்டாயே"?

"எப்படி? எதை?"

"அதெல்லாம்இல்லை; எலக்ஷன் வேண்டாம் என்றாய். சரி, சொல்லித் தொலை என்றோம். கட்சியின் பெயரும் மாறும் என்றீர்கள், தொலையட்டும்என் றோம், போதாக்குறைக்குப் போனவாரம், நீதிக்கட்சியிருக்கிறதலையங்கம் இருக்கிறதே, அதையுமா சகித்துக் கொள்ளவேண்டும்?"

"நானென்றும், சகித்துக் கொள்ளக்கூடாததை எழுதவில்லையே...."

"போதும் போதும் தம்பீ! வெள்ளைக்காரனே வெளியேபோ! என்றுதான் எழுதிவிட்டாயே!"

"ஓ! அதுவா? ஆமாம், ஏன், எழுதினால் என்ன? வெள்ளைக்காரன் வெளியே போகவேண்டியவன் தானே?"

"போகிறவன் போகட்டுமப்பா, அதைநாம் ஏன்சொல்லவேண்டும்? காங்கிரசாரும் அதேபோலச்சொல்கிறார்கள், நாமும் அதையேசொன்னால், பிறகு நமதுகட்சிக்கும் காங்கிரசுக்கும் என்னதான்வித்யாசம்?"

"ஏன்வித்தியாசம் இருக்கவேண்டும்? இந்த விஷயத்திலே இருக்கக்கூடாதே!"

"சரி, சரி, வெள்ளைக்காரனை ஓட்டிவிட்டு, அவன், ஆட்சியிலே உட்கார்ந்து கொள்ளவேண்டி, என்னென்னமோ காரியங்கள் செய்கிறான்; நீயும்கூடச்சேர்ந்துகொண்டு, வெள்ளைக்காரனை வெளியே போ என்றுசொன்னால், புத்திக்கோ, நியாயத்துக்கோ பொருந்துமா? வெள்ளைக்காரனைநீயும்சேர்ந்துஓட்டிவிடு, பிறகு, காங்கிரஸ்காரன் ஆளஆரம்பிக்கட்டும். அப்போது தெரியப் போகிறது, உன்னைப்போன்றவர்களுக்கு"

"என்னதெரியப்போகிறது?"

"தம்பீ! என் கோபத்தைக்கிளறுதே. வெள்ளைக்காரன் வெளியே போனதும், நம்மைக் கூப்பிட்டா ஆளச்சொல்வார்கள். அவன்தான் நாடு முழுவதையும் தன் வலையிலே போட்டுக்கொண்டானே, அந்தக் காங்கிரசான்தானே ஆளப்போகிறான். அவன் ஆள்வது நாம் அடங்கிக் கிடப்பது அதுதானே நடக்கும். அதற்குத்தானா நீயும்சேர்ந்து வெள்ளைக்காரனை ஓட்ட வேண்டுமென்கிறாய். இதுஎன்ன புத்தி?"

"அண்ணா! ஆத்திரப்படாதீர். வெள்ளைக்காரன்போனால் காங்கிரசார் ஆள்வார்கள், நாம் ஆளப்போவதில்லை, என்று கூறுகிறீரே, அதுஉண்மை; எனக்கும் அதுதெரியும். ஆனால், வெள்ளைக்காரன் இருக்கிற இப்போதுமட்டும், நாமா ஆள்கிறோம்,? அவன்ஆள்கிறான், அவனைக்காங்கிரஸ்கட்சி இஷ்டப்படி ஆட்டிவைக்கிறது. நமக்குஇன்றும் ஆட்சி இல்லை, வெள்ளைக்காரன் போனபிறகும் கிடையாது; இதுவும் எனக்குத்தெரியும்"

"தெரிந்துதான், நீயும் வெள்ளைக்காரன் போகட்டும் என்கிறாயா?"

"தெரிந்துதான், சொல்கிறேன். பரங்கிஆட்சிக்குப்பிறகு, இங்கு பார்ப்பன—பனியா கூட்டு ஆட்சிதான் நடக்கும்"

"மிகச்சந்தோஷம்! அந்த ஆட்சியிலே, நமக்கெல்லாம் நன்மை பிறக்கும் என்றும் சொல்லிவிடு."

"இல்லை! உங்களை நான் ஏமாற்றவில்லை, நானும் ஏமாந்து போகவில்லை, அந்த ஆட்சியிலே, நம்மைப் போன்ற எதிர்ப்புக் கட்சிகளுக்குக் கொடுமைகள் நிறைய இருக்கும். உதாரணமாக அந்த ஆட்சியிலே, ஆரியர் - திராவிடர் என்று பேசுவதே இராஜத்வேஷம் என்று கூறப்படலாம்! வடநாடு-தென்னாடு என்று பேசினால் தண்டனை தரப்படலாம்."

"பேஷ்! பேஷான ஆட்சிதான். அதற்குதான் நாமும் சேர்ந்து "தவம்" செய்யவேண்டும் என்கிறாயா?"

"நமது கூட்டங்கள் தடுக்கப்படலாம், பத்திரிகைகள் பறிமுதலாகலாம்; திராவிட மாணவர்கழகம் கலைக்கப்படலாம்; கருப்புச்சட்டைப் படை சட்டவிரோதமான ஸ்தாபனம் என்று கலைக்கப்படலாம். எவ்வளவோ நடக்கும்"

"இவைகளெல்லாம், சந்தோஷச் செய்திகள்!"

"இனி நடக்க இருப்பவை, இனிப்போ, கசப்போ, அவரவர் மனப்பாங்கைப் பொறுத்திருக்கிறது."

"அந்தக்கஷ்டங்களை ஏற்றுக் கொள்வதற்காகவே, வெள்ளைக்காரனை விரைவாகப் போகச் சொல்கிறாய், அதுவாடா தம்பீ! உன் யோசனை?"

"அண்ணா! காங்கரஸ் ஆட்சி, நமது கொள்கைகளை நசுக்கத்தான் வேலை செய்யும். அதிலே இருந்து தப்ப முடிந்தால்தான், நமதுகொள்கைகளுக்கே உரம் இருக்கிறது, உயிர் இருக்கிறது என்று பொருள் ஏற்படும். எதிர்ப்புச்சக்தி கிட்டே நெருங்காதபடி பார்த்துக்கொண்டு நாம் எத்தனை ஆண்டுகள் பேசினாலும் கொள்கை நிலைக்காது."

"விபரீதயோசனையாக இருக்கிறதே!"

"ஒரு விபரீதமும் இல்லை. விடுதலை இயக்கத்தின் அரிச்சுவடிநான் சொல்வது. காங்கிரஸ் ஆட்சி என்றால் பார்ப்பன-பனியா கூட்டு ஆட்சியாக இருக்கும், அந்த ஆட்சியிலே நாம் கொடுமைக்கு ஆளாவோம் என்பதற்குப் பயந்து, வெள்ளைக்கார ஆட்சி இங்கு இருக்கவேண்டும் என்று எண்ணுவது, நமது சுயமரியாதைக்கே கேடு தரும்."

"நாம் என்ன, என்றென்றுமா வெள்ளைக்கார ஆட்சி இருக்கவேண்டும் என்று கூறுகிறோம். நமக்குப் பலம் பிறக்கும்வரையில், நமது இன மக்களுக்கு ஆரிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை அடைய வேண்டும் என்ற தெளிவு ஏற்படும் வரை, அந்த வெள்ளைக்காரன் இருந்து தொலைக்கட்டுமே."

"அதுதான், தவறு. அவன் இருப்பது, நமது பலத்துக்குமல்ல, பொது நீதிக்குமல்ல, நாட்டுக்கு உடையவர்கள் யார், ஊர்சுற்றிகள் யார் என்பதைக் கண்டறிந்து அதன்படி ஆட்சிசெய்வதற்குமல்ல. வெள்ளைக்காரன் தூக்குபவன் துடையில் கயிறுதிரிக்க இருக்கிறானேயொழிய நீங்கள் எண்ணுவதுபோல, ஆரிய ஆதிக்கத்திலே சிக்கி நமது மக்கள் அழியாதபடி பாதுகாத்திட அல்ல. வெள்ளைக்காரன் இருப்பதால் நமக்கு நன்மை கிடையாது, அவன் போய்விடுவதால் நஷ்டம் கிடையாது. அவன் போய்விட்டதும் ஏற்படும் காங்கிரசாட்சி சர்வாதிகாரம் செய்யும். அதற்கு அத்தகைய சக்தியும் வசதியும் இருக்கிறது. அந்த ஆட்சியின் போது நமக்குக் கஷ்டம் ஏற்படும்"

"கஷ்டம் ஏற்படும் என்று தெரிந்தும் காங்கிரசாட்சி வரட்டும் என்கிறாயே?"

"காங்கரசார் இப்போது, நாட்டு விடுதலை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டவர்கள் என்றும், ஆதிக்க ஆசை அற்றவர்களென்றும் கூறுகின்றனர். வெள்ளையனை வெளியே ஓட்டுவது தவிர வேறோர் இலட்சியமும் தமக்குப் பெரிது அல்ல என்று பேசுகின்றனர். இத்தகைய பிரசாரம் ஒருபுறம் நடக்க, மற்றோர் வகையாகவும் அவர்களே பேசுகின்றனர். அதாவது காங்கிரஸ் ஆட்சியிலே நீதியும் நேர்மையும் கொலு வீற்றிருக்குமென்றும், ஏழை எளியவர்க்கே இதம் செய்யப்படும் என்றும், முற்போக்கான கொள்கைகளுக்கு முதலிடம் தரப்படுமென்றும் கூறுகின்றனர். அவர்கள் ஆட்சி ஏற்பட்டால்தானே, சொல்லுக்கும் செயலுக்கும் உள்ள பேதத்தைப் பொதுமக்கள் தெரிந்துகொள்ள சந்தர்ப்பம் ஏற்படும்? அவர்கள் இன்று சொல்வதற்கு நேர்மாறாக, ஜாதி வெறியருக்கும் முதலாளிகட்கும் அந்த ஆட்சி வேலை செய்யத் தொடங்கினால், எதிர்பார்த்தது நடைபெறக்காணோமே என்ற ஏக்கமும் கிணறு தோண்டப் பூதம்புறப்பட்டதே என்ற கலக்கமும், இந்த அவலட்சண ஆட்சியைக் காணவா நாம் இவ்வளவு பாடுபட்டோம் என்ற சஞ்சலமும், பொதுமக்களிடையே உண்டாகித்தீரும். காங்கிரஸ் தனது பிரச்சார பலத்தைக் கொண்டு, இந்த மனோபாவம் பரவாதபடி தடை செய்யும், சர்வாதிகாரத்தைக் கொண்டு, எதிர்ப்புச் சக்தி உருவாகாமுன்பே அழிக்கவும் முயலும், அப்போதுதான், மக்கள், இதுதானா காங்கிரஸ் ஆட்சி? என்று கேட்பர்; சோகத்துடன் மட்டுமல்ல, கொஞ்சம் கோபத்துடனும். கேட்டுவிட்டு, ஒரு முறை பெருமூச்சு விடுவர். ஏன்? இப்படித்தான், ஆட்சி இருக்கும் என்று திராவிடர்கழகம் முன்பே, சொல்லிக்கொண்டு வந்தது, நாம் வெள்ளைக்காரனை ஓட்டுவதற்கு திராவிடர் கழகத்துக்கு விருப்பமில்லை, ஆகவே காங்கிரஸ் மீது வீண் அவதூறு கிளப்புகிறார்கள் என்றுகருதினோம். அவர்கள்சொன்னதுதான்உண்மைஎன்றுஇப்போது தெரிகிறது, என்று கூறுவர்; கூறிவிட்டு, "நாம் பார்த்துப் பீடத்தில் ஏற்றி வைத்தோம் காங்கிரசை. நமக்கு விரோதமாக நடக்கிறது இன்று. ஆகவேநமதுகரத்தாலேயே அதனைக்கீழே தள்ளுவோம் என்று துணிவர், துணிந்ததும், திராவிடர் கழகத்திடம் அந்தப்பணியை ஒப்படைப்பர்."

"தம்பீ! நீ நினைக்கிறபடி, காங்கிரஸ் ஒரு தவறும் செய்யாவிட்டால்? உன் திட்டம் வெறும் கனவாகிவிடுமே?"

"காங்கிரசாட்சியிலே அத்தகைய கேடுகள் இல்லாவிட்டால், நான் கூறும் திட்டம் நடைபெறுமல்லவா? அப்போது திட்டம் தேவைப்படாது. நல்லபடி ஆண்டு வருவதானால், நமக்கு என்ன தொல்லை சொன்னபடியின்றி, பனியா-பார்ப்பன நலனுக்கேற்றபடி நடந்தால், மகத்தான எதிர்ப்புச்சக்தி கிளம்பித்தீரும். எனவேதான், காங்கிரசாட்சி ஏற்படட்டும் அதனுடைய "இலட்சிய ஆட்சியிலே" என்ன நடக்கிறது என்று பார்ப்போம் என்றுதான் கூறுகிறேன். காங்கிரசாட்சி வருவதற்காகத்தான் வெள்ளைக்காரனைவெளியே போகச் சொல்கிறார்கள். நானும் அந்தக் காங்கிரசாட்சியின் போக்கும் தன்மையும் எப்படி இருக்கிறது என்பதைக் கண்டறிய ஒரு சந்தர்ப்பம் வேண்டும் என்பதற்காகவே வெள்ளைக்காரனே வெளியே போ, என்று கூறுகிறேன்."

"வாதம் சரிதானப்பா, ஆனால் வாய்ப்பு அல்லவா நேரிடும், அந்தக் காங்கிரசார் ஆட்சிக்கு வந்தால்? கொடுமைகள் நடக்குமே"

"நடந்தால், படத்தான் வேண்டும்"

"ஏனோ!"

"ஏன்? கொள்கைக்காக. நமக்குச்சில கொள்கைகள் உண்டு. காங்கிரசாட்சியிலே, அந்தக்கொள்கையைக்கொண்ட நம்மைக்கொடுமைசெய்தால், நாம் அனுபவிக்கத் தான்வேண்டும்."

"தொல்லைகள் தருவார்கள்"

"ஆமாம்! 144, 124, முதலிய செக்ஷன்கள், தடியடி துப்பாக்கிப் பிரயோகங்கள், இன்று இல்லாத புதுச்சட்டங்கள்கூடத்தான்வரும். அந்தத்தாக்குதலை ஏற்றுக்கொள்ளத்துணிவும் சம்மதமும்இருந்தால் மட்டுமே, நாம் கொள்கைகளைக் கொள்ளயோக்யதை உடையவர்கள். எதிர்ப்பும் அடக்குமுறையும் தோன்றுமே என்று அஞ்சினால், நமக்குக் கொள்கைகள் கூடாது. நாம் லாயக்கற்றவர்கள் என்று அர்த்தம். பெரியகயிற்றுச் சுருணையின் ஒருமுனையைப், பெரியதோர் மரத்தில் கட்டிவிட்டு, மறுமுனையை நமது இடையில் கட்டிக்கொண்டு, தண்ணீரில் புகுந்து, நீச்சல் பழகலாம், ஆனால், கடைசிவரையிலே அதேமுறை இருக்கவேண்டுமென்றால் அதற்குப்பெயர் நீச்சல்அல்ல. பயங்கொள்ளித்தனம். அதுபோல, நமது கொள்கைகள், பலமானஒரு ஆட்சி தாக்காதபடிபாதுகாப்பாக இருந்துகொண்டு, எத்தனை காலந்தான், அந்தக்கொள்கைகளைவளர்த்தாலும், வளராது. எதிர்ப்புக்கு இடையே உலவவேண்டும். ஜாலியன்வாலா, பகத்சிங்தூக்கு, குமரன்மரணம், போன்ற எத்தனையோ கொடுமைகளைக் காங்கிரசார் அனுபவித்தனர். பல்லாயிரவர் சிறை புகுந்தனர். பலருடைய வாழ்வே சிதைந்தது. அவர்கள் உடலிலே உள்ள தழும்புகள், கொண்ட கொள்கைக்காகக் கஷ்ட நஷ்டம் ஏற்கத்தயாராக இருந்த தீரர்கள் அவர்கள்என்பதைஎடுத்துக்காட்டு

(அடுத்த பக்கம் பார்க்க)

## அலுவலகத்தில் வாதம்

5-ம் பக்கத் தொடர்ச்சி

கின்றன. அதுபோல, நமது கொள்கைகளுக்காக, (அவர்கள் அன்னியரிடம் பட்டகஷ்டத்தைப்போல,) நாம் அவர்கள் ஆட்சியிலே கஷ்டநஷ்டம் ஏற்கத்தயாராக இருக்க வேண்டும். நமது உடலிலும் தழும்புகள் ஏற்படவேண்டும். அதற்குத் தயாரில்லை என்றால் அண்ணா! நமக்கென்று கொள்கைகள் கூடாது, நமக்கு அத்தகைய யோக்யதை இல்லையென்று பொருள்.''

"எத்தனை காலத்துக்குக்கொடுமைகளை அனுபவிக்கவேண்டுமோ?''

"கொள்கையிலே உண்மையான பற்று இருந்தால், கொடுமை நேருமோ, அதன் தன்மை எப்படி இருக்குமோ, எவ்வளவு காலத்துக்கு அனுபவிக்கவேண்டுமோ என்ற கவலை கூடத் தோன்றக் கூடாது, 150 ஆண்டுகளாக, நாமும் அவர்களும் சேர்ந்து அன்னிய ஆட்சியைச் சகித்துக்கொண்டோம். அவனுடைய ஆட்சியிலே, எவ்வளவோ தொல்லைகள் அனுபவித்தோம். அன்னியரிடம் 150 ஆண்டுபட்ட கஷ்டம், துக்கம் மட்டுமல்ல, வெட்க காமானதுங்கூட! காங்கிரசாட்சியிலே, ஏன் ஒரு 15 வருடகாலம், நாம் கஷ்டநஷ்டத்தை ஏற்கத்தயாராகக்கூடாது? நாம் கொண்டுள்ள கொள்கையோ, வரலாற்றிலேபுதைந்துள்ள உண்மையை வெளிக்குக் கொண்டுவருவது, மக்கள் மனதிலே இருக்கும் மயக்கம்போக்கி, மாசு நீக்கிப்பிறகு மாண்புள்ள கோட்பாடுகளைப் புகுத்துவதாகும். தலைமுறை தலைமுறையாக இருந்துவரும் முறையை மாற்ற விரும்புகிறோம். அவதார புருஷர்களும் அரசர்க்கரசர்களும் ஆகாது என்று கைவிட்டதைநாம்சாதிக்கக்கிளம்புகிறோம். அண்ணா! இவ்வளவு மகத்தான காரியத்தை நாம், உடலில் தழும்பே பெறாமல் சாதித்து விட முடியுமா?''

"அப்படியானால்...............''

"நாம், காங்கிரசாட்சிக்குத்தயாராகவேண்டும். அதன் 'கப்சிப்' தர்பாருக்கிடையேதான் உலாவவேண்டும். ஆனால் ஒன்று தெரிந்துகொள்ளுங்கள். நாம் நமது கொள்கையிலே உறுதி காட்டினால், நம்மீது நடத்தப்படும் ஒவ்வொரு தாக்குதலின்போதும், காங்கிரசின் படைவரிசையில் ஒவ்வொரு பிளவு ஏற்பட்டு, நமது அணிவகுப்புக்குப் புதுப்புது வீரர்கள் வந்து சேர்ந்த வண்ணம் இருப்பர்''

"எப்படி?''

"இப்போது, நம்மைக்காங்கிரசிலுள்ள திராவிடர் ஏகாதிபத்யதாசர்என்று அழைக்கிறார்கள், நாம் அவர்களைஆரியதாசர்என்று அழைக்கிறோம் அல்லவா?''

ஆமாம்!''

"ஏகாதிபத்யம் ஒழியவேண்டும். அதை ஒழிக்கக்கிளம்புவதாகக் காங்கிரஸ் கூறுகிறது, நாமும் ஆம்! அந்த ஏகாதிபத்யம் ஒழியத்தான் வேண்டும் என்றுகூறுவோம், அந்த ஏகாதிபத்யம் ஒழிந்ததும், நாம் நமது கொள்கைகளை வலியுறுத்தும்போது, நம்மை அந்தச்சமயத்திலேயும், ஏகாதிபத்ய தாசர்கள் என்று கூறமுடியாதல்லவா? அந்தச்சமயத்திலே ஆரியதாசராக இருக்க இசைபவர் யாரார் என்பதை நாடு கண்டறிய நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டுவிடும்.''

"எவ்விதம்?''

"இப்போது நாம், எந்த முற்போக்கான, மக்கள்நன்மைக்கான திட்டத்தைக்கூறினாலும் வெள்ளைக்காரனை ஓட்டுவது என்ற புகைப்படலத்தை ஏவி, நமது கொள்கைகளின் தன்மை, சரியாக மக்களுக்குப்புரியாதபடி செய்துவிடுகின்றனர். வெள்ளைக்காரனும் போய், நாட்டுமக்களுக்கு வேதனைமட்டும் போகாமல், புதுவேதனையும் உண்டாக ஆரம்பித்தால், அதுபோது நாம் கூறும் திட்டங்களை எட்டி என்று கருதுபவர்களுங்கூட, கவனிக்கவும், பரிசீலனை செய்யவும், ஏற்கவும் தயாராவர். இப்போது காங்கிரசிலே உள்ள பெரும்பாலான தமிழர்கள், பார்ப்பன—பனியா ஆட்சிக்குச்சம்மதிக்கிறவர்கள் அல்ல. அது ஏற்படாதுஎன்று நம்புகிறவர்கள் சிலர். அது ஏற்படுமானால், அதனை ஒழித்துவிடுவோம், என்று சூள் உரைப்போர் பலர். அவர்களின் எண்ணம், பனியா—பார்ப்பன ஆட்சிவரும் என்று அஞ்சி, அன்னியனை ஆளவிட்டு வைக்கக் கூடாது என்பதாகும். அன்னிய ஆட்சி ஒழிந்த பிறகு, அவர்களின்போக்கு, எப்படி இருக்கும் என்று எண்ணுகிறீர்கள்.''

"எப்படி இருக்கும்?''

"பார்ப்பன — பனியா கூட்டாட்சியின் குலையை அறுப்பதாக இருக்கும். அதுபோது, நடைபெறும் பொதுக்கூட்டம் எப்படி இருக்கும் என்று எண்ணுகிறீர்கள், வெள்ளைக்காரஏகாதிபத்யத்தையே, வீழ்த்திய நாங்கள் இந்த வேதிய ஆட்சியை வேரறுமிழச் செய்யவா முடியாது. எங்கள் இரத்தத்தைச் சிந்தி சுயராஜ்யம் பெற்றோம், அதனைச் சூழ்ச்சிக்காரர் சூறை யாடுவதை நாங்கள் சகிக்கமாட்டோம், என்று. வீரமுழக்கம் செய்வர், இன்றுள்ளமுத்துரங்கபோன்றவர்கள்கூட. இவ்விதமான ஆட்சிதான் ஏற்படும் என்று நாங்கள் முன்பே எச்சரிக்கை செய்தோம் என்று நாம் கூறுவோம்''

"அவ்விதம் நடக்குமா?''

"நடக்க வேண்டுமானால், நாம், வெறும் கொள்கையைப் பேசிக் கொண்டிருப்பவர்களல்ல, ஆரிய ஆதிக்கத்தைஒழிக்கத்திட்டம்வகுப்பதிலேயே ஆயுட்காலத்தைச்செலவிட்டுக்கொண்டு, பேதமும்பிளவும் உள்ள சூழ்ச்சி நிலையைச் சாதகமாக்கிக்கொண்டு, வெள்ளைக்காரன் தன் பீடத்தின் ஆட்டத்தைச் சரிப்படுத்திக்கொள்ளச் செய்பவர்களல்ல, கொள்கைகளைப்பேசிவிட்டு ஆரியர் அனுபவிக்கும் பதவிகளைப் பெறுவதிலேமட்டும் கண்வைப்பவர்களல்ல, கொள்கைக்காகத் தியாக உணர்ச்சியுடன்பணிபுரியக் கூடியவர்கள் என்பதைச்செயலில் நிரூபித்துக்காட்ட வேண்டும். அண்ணா! அன்னிய ஆட்சியை எதிர்ப்பதற்குவேண்டிய தைரியத்தைவிட, இதற்குக் கொஞ்சம்அதிகமான தைரியம் வேண்டும்.''

"தம்பி! எனக்குத்திகிலே உண்டாகிறதே நீ சொல்வதைக் கேட்டால்''

"ஆமாம் அண்ணா! அதனால்தான் வாலிபர்களைத் திராவிடர் கழகம் அழைக்கிறது.''

★

என்னிடம் பேச வந்தவர், கொஞ்ச நேரம் மௌனமாகவே உட்கார்ந்தார். பிறகு அவருக்குப் பளிச்சென ஓர்யோசனை உதயமாயிற்றுபோலும்துவக்கினார்பேச்சை.

"இப்படி எல்லாம் கூறும்போது, ஏன், காங்கிரசிலே சேர்ந்துவிடக் கூடாது;''

"சேர்ந்துவிட்டால், இந்தத்தனியான, தேவையான, நமது மக்களின் நலனுக்கான கொள்கைகளை எப்படி வலியுறுத்தமுடியும்? நாம் இவைகளைப் பரப்பிக் கொண்டிருந்தால்தானே, இன்று வெள்ளைக்காரனைஓட்டும் காரியத்தில்முன்புவேறு எதுவும் எங்கள் கண்களுக்குப் படாது என்று பேசுகிறவர்கள், கூடியவிரைவிலே, நமது கொள்கைகளின் அவசியத்தைஉணரமுடியும்? நாம், வாய் மூடிக்கிடந்துவிட்டால், என்னநடக்கும்தெரியுமோ?''

"என்ன நடக்கும்?''

"திராவிடர் என்றோர் இனம் இருந்தது என்றுகூட அறியமுடியாதபடி ஏற்பட்டுவிடும். ஒருகதை சொல்கிறேன் கேட்கிறீரா?''

"கதையா?''

"பயப்படாதீர், நீண்ட கதையல்ல! கதைகூட அல்ல, கவிதை. பாரதிதாசன் எழுதிய "வீரத்தாய்'' கவிதையைப் படித்திருக்கிறீரா? மணிபுரிமன்னன், மதுவுக்கு அடிமையானான்; சுவையைக்காட்டிச் சொக்கச் செய்தவன் சேனாதிபதி. விஜயா ராணி விழியில் நீர்பெருக, இந்த விபரீதத்தைக் கண்ணுற்றாள். நாடு நலியக்கண்டாள். இளவரசன், எட்டாண்டுப்பாலகன். அவனைச், சேனாதிபதி, காட்டிடை சில காவலருடன் விடுத்தான், கல்வி பயிலாது, வீணாகவேண்டுமென்று. மன்னனோ குடியன், மகனோ சிறுவன், கல்வியிலான், இந்நிலையில் விஜயராணியும் அரண்மனையைவிட்டு எங்கோபோய்விட்டார்கள். சேனாதிபதி தன் சூழ்ச்சி பலித்தது என்று எண்ணி, மணிபுரி மன்னனாகத் துணிந்தான். பல நாட்டு மன்னர்களைச் சபையிலே கூட்டிவைத்து,

"மணிபுரியின் வேந்தனார் மதுவையுண்டு
மனங்கெட்டுப் போய்விட்டான்! விஜயராணி
தணியாத காமத்தால் வெளியே சென்றாள்!
தனி இருந்த இளங்கோமான் சுதர்மன் என்பான்
அணியாத அணியில்லை, அழகே உள்பான்
அருமையுடன் வளர்த்து வந்தும் கல்வியில்லை
பிணிபோல அன்னவர்பால் தீயொழுக்கம்
பெருகினதால் நாட்டினரும் அமைச்சர்யாரும்
என்னை முடிசூடுகென்றார்.''

என்று சேனாதிபதி கூறினான் மிகப்பணிவாக. மன்னனுக்கு மது தந்தவனும், இளவரசனைக் கல்வியிலாதானாக்க ஏற்பாடு செய்ததும் அவனே. கூறுவான் அவ்விதம்! மேலும்.

"மணிமுடியை நான் புனைந்தால் உம்மைமீறேன்
எந்நாளும் செய்ந்நன்றி மறவேன் கண்டீர்
என்னாட்சி நல்லாட்சியாயிருக்கும்

என்றும் சேனாதிபதி உறுதி கூறினான். ஆனால் என்ன நடந்தது? இளவரசன் எங்கே? அவரைப் பார்க்கவேண்டும். பிறகுஆட்சிக்கு அவர் தகுதியா இல்லையா என்று தெரிந்துகூறஇயலும், என்றுமண்டலாதிபதிகள் கூறினர்.

கத்தியும் கேடயமும் தாங்கிக்கொண்டு, காளை, கிழவனொருவனுடன் சபையில் வந்தான். யார்? இளவரசன்!

"ஏடாசுதர்மா! இவன் யார் நரைக்கிழவன்!
கேடகமும் கத்தியும் ஏன்?
கேட்டொழியத்தக்கவனே!''
என்று கேட்டான் சேனாதிபதி.
"என் நாட்டை நான் ஆள ஏற்றகலையுதவும்
தென்னாட்டுத்தீரர்; செழுந்தமிழர் ஆசிரியர்.

என்று இளவரசன் பதிலீறுத்தான்.

"உன்நாட்டை நீ ஆள ஒன்னுமோ சொல்லடா!''

என்று உறுமினான் சேனாதிபதி.
"என்நாட்டை நான் ஆள்வேன்
எள்ளளவும் சந்தேகமில்லை''

என்றான் இளவரசன்; எதிர்த்த சேனாதிபதியை வீழ்த்தினான். இதற்குள், கிழவன் கோலத்தைக்கலைத்துவிட்டு விஜயராணி — வீரத்தாய் — நின்றாள். சூழ்ச்சிக்காரன்என்மகனை வெறும் வீணனாக்க ஏற்பாடு செய்தான். நான் கிழவன் வேடத்தில் அடவி சென்று என்மகனைவீரனாக்கினேன், விவேகியாக்கினேன், என்று வீரத்தாய், விஷயத்தை விளக்கினாள். வீரத்தாய்போன்றது திராவிடர் கழகம், இளவசரன் நிலை திராவிடவாலிபருக்கு. திராவிடப்பெரியவர்களோ, ஆரிய மது உண்டு கிடக்கின்றனர். இந்நிலையில் வீரத்தாய், அரண்மனைக்குள்ளிருந்து, அமளியில் ஈடுபட்டால் சேனாதிபதியின் கரம் வலுவடையும், இளவரசனும்இறந்துபடுவான். எனவே வீரத்தாய் சேனாதிபதி கோலாகலமாக வாழ்வதுபற்றிக் கவலைகொள்ளாமல், இளவரசனை வீரனாக்கும் காரியத்திலே ஈடுபட்டாள். இளவரசன் வீரனானான், வீழ்ந்ததுசூதுக்காரன் ஆட்சி. அதுபோலவே, திராவிடர் கழகம் பணிபுரிய வேண்டுகிறது. அந்தப்பணியை, உடனடியாகப்பலன் கோராமலும், சேனாதிபதியின் கோலாகலம்போல் ஏற்படப்போகும் காங்கிரசாட்சியை வரவிடாத தடுக்கும் வீண்முயற்சியில் ஈடுபடாமலும், திராவிடரை வீரப்புதல்வராக்கும் காரியத்தில் ஈடுபடவேண்டும். அதன் பிறகு அமைக்கப்படும் ஆட்சியின்போதுதான், அந்தவீர இளவரசன் கூறியதுபோல நாமும்,

"எல்லார்க்கும் தேசம், எல்லார்க்கும் உடைமை எலாம்
எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆதகவே
எல்லார்க்கும் கல்வி சுகாதாரம் வாய்ந்திடுக
எல்லார்க்கும் நல்ல இதயம் பொருந்திடுக
வல்லார்க்கும் மற்றுமுள்ள செல்வர்க்கும் நாட்டுடைமை
வாய்க்கரிசி என்னும் மனப்பான்மை போயொழிக
வில்லார்க்கும் நல்ல நுதல் மாதர் எல்லார்க்கும்
விடுதலையாம் என்றே மணிமுரசும் ஆர்ப்பீரே!''

என்று கூறமுடியும். அண்ணா! இது நமது இலட்சியம். இதனைப் பெறுவதற்காக, நாம் சரியானவிலை கொடுக்க வேண்டாமா?''

★

அவர், ஓரளவு திருப்தி அடைந்தார் என்றே நம்புகிறேன். ஏனெனில், அவர், "நான் சிந்திக்கிறேன். —நீ சொல்வது சரியாகத்தான் இருக்கும்போல் இருக்கிறது'' என்றுகூறிவிட்டு, அலுவலகத்தை விட்டுப்போனார்.

●

## திருமணம்

ஆலத்தம்பாடி திராவிடர் கழக உறுப்பினர் தோழர் குஞ்சிதபாதத்திற்கும் தோழியர் செல்வமணி அம்மைக்கும் 6—2—46ல் நடந்த வாழ்க்கை ஒப்பந்த நினைவாக ரூபா ஒன்று திராவிட நாடு வளர்ச்சிக்குத் தரப்பட்டது.

பொள்ளாச்சி "பகுத்தறிவு நூல் நிலையம்'' பொதுச் செயலாளர் தோழர் ம. தங்கவேல் அவர்கட்கும், தாராபுரம் திரு எ. ஞானசுந்தரம் அவர்கள் புதல்வி திருமதி ஜி. மகாலட்சுமிக்கும் 7—2—46ல் தாராபுரத்தில் தமிழ்த்திருமணம்நடந்தது.

6—2—1946 புதனன்று அருப்புக்கோட்டை தோழர் சங்கரலிங்கத்துக்கும் தோழியர் ருக்மணிக்கும் வாழ்க்கை ஒப்பந்தம் சு. ஆ. முத்துநாடாரால்நடாத்தப்பட்டது. ரூபா2. மண நினைவாக 'திராவிடநாடு' வெளியீட்டிற்கு அளிக்கப்பட்டது.

அறிவுச் சுடர்

# இங்கர்சால்

[வேலன்]

தோழர் இங்கர்சால் ஓர் சிறந்த அறிவாளி யென்று நாம் கூறத் தேவையில்லை. அவரை ஓர் நாத்திகரென்று வாயார மனமார நவின்ற அவர் நாட்டு அறிஞர்களே ஏற்றுக் கொண்ட செய்தியாகுமது. அவர் அறியாமையெனும் இருள் நீக்கிய அறிவுச்சுடர். அவரால்கூறப்பட்ட வாதங்களனைத்தும் உளமெனும் பொற்றட்டில் வைரமெனும் எழுத்துக்களாற் பொறிக்கப்படவேண்டியவை. அவர் ஓர் நிகரற்ற வழக்கறிஞராகத் திகழ்ந்தார். இராணுவ அதிகாரியாகஇருந்தார். தலைசிறந்த சொற்பொழிவாளராகவிளங்கினர். இராபர்ட் அமெரிக்காவில் ட்ரெஸ்டன் (Dresdon) நாட்டில் 1833ம் ஆண்டு ஆகஸ்டுமாதம் 11ம் தேதியன்று பிறந்தார்! இளைஞர்கள் இயற்கையாக விரும்பும் காற்றோட்டமுள்ள திறந்தவெளிவாழ்க்கையை இளமையில் இங்கர்சால் நடத்தினர். பெற்றோர்களிடத்தில் பெற்றகல்வியைத் தவிரக் கல்லூரி சென்று பயின்றாரில்லை. அவ்வறிஞர் பிற்காலத்தில் கல்லூரிகளைப்பற்றிக்கூறுகையில் 'கல்லூரிகள் கூழாங்கற்களை மெருகிடுகின்றன, ஆனால் வைரங்களை மங்கச் செய்கின்றன' என்று உரைத்தார்.

பதினெட்டாம் வயதிலே சட்டம் கற்கத் தலைப்பட்டு வழக்கறிஞரிடம் வேலைக்கமர்ந்து, இருபத்தொன்றாம் வயதிலே இல்லினாஸ் மன்றத்திலே (Illinos Bar) இங்கர்சால் இடமும் பெற்றார். அக்காலத்தில் சட்டப்பயிற்சி தற்போதுள்ளதுபோல் குறிப்பிட்ட அளவில்லாமலும், இங்கிலாந்தில் உள்ளது போல் கடினமாக இல்லாமலும் இருந்துங்கூட இங்கர்சால் மிகக் கஷ்டப்பட்டுச் சில சமயங்களில் விடியற்காலைவரை கூடவாசித்திருக்கிறார். அவரின் வாதாடும் திறமையானது காந்தம் இரும்பை இழுப்பதுபோல் மக்களை இவர்பால் கொண்டுவந்தது. வழக்காடும் தொழில் தொடங்கி 10 ஆண்டுகட்கெல்லாம் அமெரிக்க நாட்டிலேயே ஓர் நிகரற்ற வழக்கறிஞர் என்பதை அனைவரும் ஒப்புமோர் உண்மையாக்கிவிட்டார். அவர் எதைப் படித்தாலும் ஆழ்ந்த ஆராய்ச்சி அறிவுடன் கற்று மனதிலே பதிய வைத்தார். அவர் வழக்கை வாதாடும் திறமை, நுண்ணிய அறிவு இவைகள் நீதிபதிகளை நிலைகலங்கச் செய்தன. எதிரி தரப்பில்வாதாடும் மிகத்திறமை வாய்ந்த வக்கீல்களைக் கூட ஏங்கச்செய்தன. அவர்தனது கருத்துக்களை எக்காலத்திலும்,எதற்காகவும், எந்த இடத்திலும் மறைத்துப்பேசிய தில்லையாது. 1868ம் ஆண்டில் நாட்டுப்பாதுகாப்பாளர் தேர்தலுக்கு நின்றார். அவர் ஓர் மதவிரோதி என்ற ஒரே காரணத்தால் உண்மையில் தேர்தலில் நிற்க விருப்பமில்லாத ஒருவர் இங்கர்சாலிற்கெதிராக நின்று வென்றுவிட்ட போதும்,தன்னுடைய கருத்துக்களையும் கொள்கைகளையும் ஒரு சிறிதும் விட்டுக்கொடுத்தாரில்லை. அவர்தோல்வியுற்றதற்குக்காரணம், அவர் திறமையும், தகுதியும் அற்றவர் என்பதல்ல, ஆனால் அவர் பகுத்தறிவு வாதி, மதத்திற்குமண்டியிட மறுத்தி ட—கண்காணுக்கடவுளுக்குக் கட்டுப்படாதவர், மதம்மனித முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையென்ற கருத்துடையவர் என்பதுதான். எதுவும் புரிந்து கொள்ளமுடியாத அளவு உயர்ந்த தொரு தத்துவமாயிருக்கமுடியாது என்ற கொள்கையுடையவர். உண்மையே உலகத்தின் அறிவுச் செல்வம் என்று அறைந்திட்டவர். உண்மையே இன்பத்தின் ஊற்றுஎன்று உரைத்தவர்.

1861ம் ஆண்டு இறுதியிலே இராணுவ அதிகாரியாக நியமிக்கப்பட்டார். அவ்வாழ்க்கையைப் பற்றி நமக்கு அதிகம் தெரியவில்லை. பலர் அவர்பால் கருத்து வேறுபாடு கொண்டிருந்தபோதும், அவருடைய ஒழுக்கத்தைப்பற்றி ஒருவரும் குறைகூறமுடியாது. நட்பிற்கு மிகச்சிறந்தவர். உண்மையான மானிடனுக்கோர்எடுத்துக்காட்டு. நாடு சுற்றியவர். ஊக்கம், உறுதி, உற்சாகம், இரக்கம் இவைகள் அவர் தோற்றத்தில்பிரதிபலித்தன. அறிஞரின் அரிய சொற்பொழிவுகளையும் கட்டுரைகளையும்காண்போர், உண்மையை எவ்வளவு மேன்மையோடு இங்கர்சால்கடைப்பிடித்து ஒழுகி வந்தாரென்பதையும், நீதியினின்றும் சற்றும் விலகாதிருந்தாரென்பதையும், அவருக்கு விடுதலையின் மீதிருந்த அளவு கடந்த விருப்பத்தையும், சமூகத்தின் முன்னேற்றத்திற்காக எவ்வளவு ஆவலுடன் செயலாற்றினர்என்பதையும் தெளிவாகக் காண இயலும்.இது சற்றும் மிகைப்படுத்திக்கூறுவதாகாது. அறிஞனின் மொழியிலேயேகூறவேண்டுமானல் 'புனல் சுடும்' என்று அரசன்கூறிவிட்டானென்றால், அதற்காகச் சுடும் தன்மை அதிகரித்து விடாது, அல்லது ஆண்டி பகன்றானென்றகாரணத்தால்சுடும்தன்மை குறைந்துவிடாது.உண்மையானது அரசன்கூறினலும், ஆண்டி கூறினலும், வீரன் கூறினலும், வீணன் கூறினலும்,குறையற்றவன் கூறினலும்,குற்றவாளி கூறினலும்,கூறியவர்களின் தகுதியைப் பொறுத்து கூடவோ, குறையவோ செய்யாது. அதபோல் அமெரிக்க அறிஞர் நாத்திகர் என்று நவிலப்பட்டாலும், மதத்துரோகி என்று வெறுக்கப்பட்டாலும், அவர் அறைந்திட்ட ஆணித்திறமான உண்மைகள் ஒருவராலும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

இங்கர்சாலைப்பற்றி அவரைப்பின்பற்றுபவர்கள் அவர் அடைந்த பெருமையின் சிகரத்தை வேறெவரும் இதுவரைஅடைந்ததில்லை,இனியும் அடையப்போவதில்லையென்று கூறுவர். கிருத்துவப் பாதிரிமார்கள் அவரை ஓர் மதத்துரோகி, புனிதமான சொற்களை இழித்துக் கூறியவன், திறமையைத் தவறான வழியிலே செலவிட்டவன் என்று தீர்ப்புக்கூறுவர். நாம் நடுநிலைமையிலிருந்து அவரது கருத்துக்களை ஆராய்ந்தோமானல் அவைகள் யாவும் நியாயமாகவும் ஒப்புக் கொள்ளக்கூடியதாகவும்உள்ளன. மனிதனின் செய்கை, இவ்வாழ்க்கையைப் பொறுத்தமட்டில் ஓர் குறிப்பிட்ட அளவுதான் உள்ளதென்று கூறியதை மறுக்கமுடியுமா? அறிவிற்கப்பாற்பட்டதாகக் கருதப்படுவதைப்பற்றிக் கவலைப்படக்கூடாதென்று பகன்றதை மறுக்கமுடியுமா? தற்போதைய நிகழ்ச்சிகள், சென்றகால நிகழ்ச்சிகளின் தடுக்கமுடியாத குழவியென்பதையும், அதுவே பிற்கால நிகழ்ச்சிக்குத் தாயென்பதையும் மறுக்க முடியுமா? சிங்காசனமும், சிலுவையும் மக்களின்சுதந்திரஎண்ணத்தைக் கட்டாயத்தினலும், பயத்தாலும் அன்றுதொட்டு இன்றுவரைதடைப்படுத்தவில்லை யென்று கூறிவிட முடியுமா? அரசாங்கங்களும், அர்ச்சகர்களும் மக்களின் சுதந்திரச் செய்கைகளையும் கருத்துக்களையும் தடைப்படுத்த ஒன்றுக் கொன்று உதவியாக இருந்துவருகிதென்பதை மறுக்கமுடியுமா? மக்கள் மதத்தைப் பின்பற்றுவது பயத்தினலோ அல்லது இன்பம் கிட்டும் என்ற எண்ணத்தினலோவன்றி நன்மைசெய்யவேண்டுமென்பவைகளினல் அல்ல என்பதை மறுக்க முடியுமா? எதை மறுக்கமுடியும்? அவர் சொற்பொழிவாற்றகின்றாரென்றால், கூட்டம் ஏராளம். அவருக்குக்கிடைத்த வருமானத்தில், அவர் விரும்பி இருந்தால் அமெரிக்க நாட்டிலே பெரும் பணக்காரர்களில் ஒருவராக வாழ்ந்திருக்கலாம். தேவைக்கதிகமான பொருளைச் சேர்த்துவைக்கும் சிறுமதி படைத்தவரல்ல.நான்கைந்துகுடும்பங்களைக் காப்பாற்றிவந்தார்.

அவருக்குப் பள்ளியே மாதா கோயில், உலகமே புனிதமான நூல். நன்மைசெய்வதிலேயேஇன்பத்தைக்கண்டவர், அறிவிலே உள்ளொளியைக் கண்டவர். நியாயத்திற்குத் தலைவணங்கினவர். சமுதாயத்தை மதமென மதித்தவர், அன்பைக் குருவாகக்கொண்டவர், விடுதலையைத் தலைமேற்கொண்டவர், ஒழுக்கத்திலே உயர்வினைக் கண்டவர்,உழைப்பிலேஉற்சாகங்கொண்டவர், பகுத்தறிவிலே பக்குவம் கண்டவர், கல்வியிலே காதல் கொண்டவர். மூடப்பழக்க வழக்கங்களைப்பற்றி அவ்வறிஞர் ஆற்றிய உரைகளால் அமெரிக்காவில் பன்னெடுங்காலமாக நம்பப்பட்டுவந்த குருட்டுப்பழக்கவழக்கங்கள் உணரப்பட்டு, கைவிடப்பட்டுள்ளன. அவர் மக்கள் வாழ்க்கையிலேயே ஓர் புரட்சியை உண்டாக்கியவர். அவர் கூறியவைகள் கற்றறிந்து பழைமைக்கு மெருகிட்டுத் தத்து வார்த்தம் பேசும்பழைமை விரும்பிகளுக்கன்று. பழைமையைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றும் கபோதித் தன்மையைக் கப்பிக் கொண்டிருந்தபொதுமக்களுக்கேயாகும்.

இராபர்ட் இவாபார்க்கர் (Eva Parker) என்னும் நங்கையை 1862-ம் ஆண்டு பிப்ருவரி மாதம் 13-ந்தேதி மணந்து நல் இல்வாழ்க்கை நடாத்தி நாட்டிற்கும், மனித சமுதாய நலனிற்கும் வாழ்நாள் முழுவதும் தொண்டாற்றினர். மக்களின்வாழ்க்கையை வளப்பெறச் செய்தார். இன்று இங்கர்சால்இவ்வுலகின் எம்மூலையிலும் இல்லாவிடினும், அவருடைய ஆராய்ச்சி பொதிந்த அரியகருத்துக்கள் உலகின் ஒவ்வொரு மூலையிலும் பரவியிருக்கின்றன. 1899-ம் ஆண்டு ஜுலைமாதம் 21-ம்தேதி உடல்நலக் குறைவை உணர்ந்தார். ஓர் சாய்வு நாற்காலியிற்சாய்ந்தவர்மறுபடியும் எழுந்தாரில்லை. அன்று இயற்கையளித்த இறுதிச் சாய்மானம் அந் நாற்காலி. இயற்கையை யுணர்ந்திருந்த அப்பெரியார்க்கு இன்னலின்றியே இயற்கையில் இடங் கிடைத்து விட்டது. இயற்கையை யுணர இவ்வுலகமக்கள், இங்கர்சாலைக்காரைக் கண் திறக்கட்டும்; வாழ்வினிலே வழிதிறக்கும் என்பதுறுதியாம்.

பலருக்கு அவரின் கடவுள்ஆராய்ச்சியிலே கருத்து வேறுபாடிருக்கலாம். அதைப்பலர் விரும்பாமலும் இருக்கலாம். ஆனல் அவர் கண்டறிந்த உண்மைகளை மறுக்க இயலாது. அவைகளை உணர்ந்து பயன்படுத்திக் கொள்வதே அறிவுடைமையாகும்.உண்மையாகவே உலகில் சமாதானம் நிலவவேண்டுமானல், மக்கள் மாக்களாகவன்றி மக்களாகவே வாழவேண்டுமானல் இங்கர்சாலின் இன்மொழிகளே வழிகாட்டிகளாகும்,பொதுவாக மாணவஉலகு இங்கர்சாலைப் பற்றிக் கண்டிப்பாக உணரவேண்டும். குறிப்பாக நம்நாட்டு மாணவர்களுக்கு விழிப்புண்டாக்க அவ்வுணர்வு இன்றியமையாததாகும். அவரின் கருத்துக்களை அறிந்து நாம் அணுகுண்டு காலத்தில்வாழ்ந்துங்கூடக் கற்கால வாழ்க்கையிலேயே இருக்கும் நிலைமை மாற்றி விஞ்ஞானகால வாழ்க்கைக்கேற்ற நிலைமை நம் நாட்டுமக்களுக்கு ஏற்படுத்துவது ஒவ்வொரு இளைஞனின் கடமையாகும். மாணவர்கள் ஒரு மனதுடன் ஒன்றுகூடி மடைமையை மாய்த்து, அறியாமையை அகற்றி பகுத்தறிவைப் பயன்படுத்தி அறிவுச்சுடரை வளர்த்து, தன்னுணர்வு தழைக்கும் புத்துலகைத்தோற்றுவிப்பார்களாக.


"கௌரி பற்பொடி."




• பல்லில் சீழ் இரத்தம் வரும் பயோரியாவை ஆச்சரியமாய் குணமாக்கி விடுகிறது. எல்லா ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை. சாம்பிள் விலை விபரத்திற்கு எழுதவும்.

சஞ்சீவி வைத்தியசாலை
பழனி (S I.)



சென்னைப் பல்கலைக் கழகத்தின்
பதிவு செய்துகொண்ட
பட்டதாரிகளுக்கு

**வேண்டுகோள்**

அன்புடையீர்,

சென்னைப்பல்கலைக்கழகத்தின் செனட் சபை தேர்தலுக்குப் பதிவு செய்து கொண்ட பட்டதாரிகள் தொகுதியின் மூலம் நான் போட்டியிடுகிறேன்.

இருபது ஆண்டுகளாக நான் சென்னை பச்சையப்பன் கல்லூரியின் ஆங்கிலப் பேராசிரியனாக இருந்து வருகிறேன். மேலும் கடந்த பத்தாண்டுகளாக அகடமிக் கவுன்சில் மெம்பராகவும், சென்ற மூன்றாண்டுகளாக செனட் அங்கத்தினனாகவும் இருந்த அனுபவம், இப்பொழுது உங்களின்பிரதிநிதியாகச்செனட்சபைக்கு செல்வதற்கு உதவியாயிருக்கும் என நம்புகிறேன்.

ஆதலின்,பட்டம்பெற்றுப்பதிவுசெய்து கொண்ட நண்பர்கள் எல்லோரையும் இயன்றவரை தங்கள் முதல் வோட்டையும் இல்லையெனில் இரண்டாவது வோட்டையாகிலும் எனக்கு அளிக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

இங்ஙனம்
தங்களன்புள்ள,

M வரதராஜன் B.A.,
ஆங்கிலப் பேராசிரியர்,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை.



தந்தி:- "புருமார்க்" திருச்சி.



## அதுதானு, இரகசியம்!

★

குமாரராஜா சர். முத்தைய செட்டியார், காங்கிரஸ் வைரி. ஆனல் அவர், நாட்டுக்கோட்டை நகரத்தார் தொகுதியில் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஏன் காங்கிரஸ், அவருக்குப்பாதையைத்திறந்து வைத்தது? பயமா? பாசமா? தனவணிகர் குலத்திலே, அந்தத் தொகுதியிலே, குமாரராஜாவை எதிர்த்து நிற்கக்கூடிய, காங்கிரஸ் அன்பர் ஒருவர்கூடக் கிடைக்கவில்லையா? என்ன இரகசியம்? என்று எல்லாக்கட்சியினரும் கேட்பர்.

ஜனவரி 13-ந்தேதி, திருச்சி "சிவாஜி" இதழில், தோழர் ராஜகோபாலாச்சாரியாரைப்பற்றித் தீட்டப்பட்டுள்ள கட்டுரையில், அவருடைய தந்திரங்களை எடுத்துக் காட்டியதில்,

"செட்டிநாட்டுக் குமாரராஜாவையும் 'தாஜா' செய்து வைத்திருப்பதாகச்சொல்லிக்கொள்கிருர்கள். தனவணிகர் தொகுதியில் குமாரராஜாமுத்தையாசெட்டியாருக்குப் போட்டியாகக்காங்கிரஸ் சார்பில்தகுந்த ஆசாமியைப்போட வொட்டாமல் செய்துவிடுவதாக ராஜாஜி அவருக்கு உறுதி அளித்திருப்பதாகவும் சொல்லிக்கொள்ளப்படுகிறது." என்றுகாணப்படுகிறது.

குமாரராஜா போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டதன் இரகசியம் இதுதானே?

—

## ஏன்?

தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர் தோழர் காமராஜர், சட்டசபை அபேட்சகர்களைப் பொறுக்கும் கமிட்டியிலிருந்து,காந்தியாரின்கட்டுரையின்பயனக விலகிக்கொண்டதும், தமிழ்நாட்டிலே கொதிப்பும் கண்டனமும் அமோகமாக இருந்தது. ஆச்சாரியாரை மட்டுமல்ல, காந்தியாரின் போக்கையேகூடக் கண்டிக்கவும், அவர் உபயோகித்த 'கிளிக்' என்றவார்த்தையை வாபஸ் வாங்கவேண்டும் என்று துணிந்து கூறவும், அதுசம்பந்தமாகக் கூட்டங்கள், கடைஅடைப்பு, கண்டன ஊர்வலங்கள் நடத்தவும், வாபஸ் வாங்காவிட்டால், உண்ணுவிரதம் இருப்போம் என்று எச்சரிக்கவும், ஆச்சாரியாரைத்தாங்கும்'கல்கி'பத்திரிகையைக் கொளுத்தவும், தமிழ்நாடு முன்வந்தது. ஆனல், அந்த தமிழ்நாடு,ஆச்சாரியார், நான்சட்டசபைத் தேர்தலுக்கு நிற்கப் போவதில்லை என்று அறிக்கைகொடுத்து, துறவறம்பூண்டபோது, அதைப் பற்றிச்சட்டைசெய்யவுமில்லை, ஒருசொட்டுக்கண்ணீர்சிந்தவோ,ஐயோ பாவம்என்று அனுதாபப்படவோ, அவர்விலகிவிடலாமா, அவர் விலகிவிட்டால் பிறகு அரசியல் காரியம் என்னஆவது என்று கேட்கவோ, ஆளேகாணேம். சர்வ சாதாரணமான சம்பவங்களிலே ஒன்ருகிவிட்டது, ஆச்சாரியார் துறவுச்செய்தி. எந்த ஆச்சாரியாரை விட்டால், தமிழ்நாட்டுக்காங்கிரசை நடத்தும் திறமையுள்ள தலைவரே கிடைக்கமாட்டார்கள்என்று கூறிவந்தார்களோ, அந்தஆச்சாரியார் விலகிக்கொண்டார், போனல்போகட்டும், போய்விட்டால் குடியா முழுகிப் போகும், போகாமல்என்னசெய்வார், கடைசிவரை முயற்சிசெய்து பார்த்தார் முடியவில்லை,ஆகவேபோய்விட்டார், போனதுநல்லதுதான்,முன்பே விலகி இருக்கவேண்டும், அதுதான் கௌரவம், தமிழகம் கழுத்தைப் பிடித்து வெளியேதள்ளும் வரையில் இருந்தார், அது அவருக்கு இழுக்கு, என்றுபலர்கூறவும், எழுதவும்செய்கிருர்கள்.ஐயோ பாவம்என்றுகூற ஆள் இல்லை! என்? தமிழர், எங்கு இருந்தாலும், பார்ப்பனர் ஆட்சியைக்கண்டிக்கவும், பார்ப்பனரின் சூழ்ச்சியை எதிர்க்கவும் துணிந்துவிட்டனர். ஆச்சாரியாரின்தந்திரத்தையும், சம்பந்தி செல்வாக்கைக் கொண்டு சர்வாதிகாரம்செய்வதையும், சென்றமுறைசட்டசபையிலே மற்றக்காங்கிரஸ் அங்கத்தினர்களை நடத்திய போக்கையும், தமிழகம் சகித்துக்கொண்டது, சமயம்வரட்டும், ஆச்சாரியாருக்குச் சரியான பாடம் கற்பிக்கலாம் என்று. சமயமும் வந்தது, ஆச்சாரியாரும்தமது நிலைமை இவ்வளவுதான் என்பதையறிந்து கொள்ளச் செய்து விட்டனர்.

ஆச்சாரியார் மீண்டும், அரசியல் வானிலே தோன்றக்கூடும், மாகாணம் போனல்போகட்டும், டெல்லிக்குப் போகலாம் என்றும் எண்ணக்கூடும், அகில இந்தியக் காங்கிரசுக்குத் தலைவராகவும் கூடும், ஆனல்,இனி எதுநடந்தாலும், ஆச்சாரியாரின் வாழ்விலே இப்போது எற்பட்ட இந்தப்"பங்கம்" மறையாது. தமிழகம், பார்ப்பனியத்துக்குத்தலைவணங்க மறுக்கிறது என்பதற்கு இந்தச்சம்பவம் ஓர்எடுத்துக்காட்டு.

—

### இந்தியன் டெயிலி மெயில்

சிங்கப்பூரில் நடைபெறும் "தமிழ்முரசு" ஆசிரியர் தோழர் சாரங்கபணி அவர்களால், இந்தியன் டெயிலி மெயில் என்ற ஆங்கில தினசரி ஒன்று நடத்தப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேம். தூரக்கிழக்கு நாடுகளிலே உள்ள தமிழரின் நல்வாழ்வைக் குறிக்கோளாகக் கொண்ட மேற்படி இதழ், தக்க பணியாற்றும் என்று நம்புகிறேம். போர்ப்புயல் அடங்கிவிட்டபோதிலும், வல்லரசுகளின், ராஜதந்திர வேட்டையும், ஆதிக்க நோக்கமும் மடியவில்லை. இந்த நிலையை மாற்றவும், உள்நாட்டு, வெளிநாட்டுச் சுரண்டல்காரரின் பிடியிலிருந்து தப்பி, புதிய மலாய் நாடு மலரவும், இந்த இதழ் பாடுபடும் என்று ஆசிரியர் அறிவிக்கிருர். சீரியநோக்கங்கொண்ட இவ்விதழ் கோரிய பலன் தருவதற்கு, மக்கள் இதனை ஆதரிக்க வேண்டுகிறேம். இதழின் தனிப்பிரதி விலை பத்து சென்ட்.

## அந்த ஆட்சி

●

முன்பு, ஆச்சாரியார்முதலமைச்சராக அமர்ந்துநடத்தியஆட்சியை நாம் கண்டித்தபோது, காங்கிரசார், கோபித்து, தேசிய மந்திரி சபையைக் குறைகூறுவதா, கண்டிப்பதா, என்று வாதாடினர். சென்றகிழமை, திருச்சியில், காங்கிரஸ் சோஷியலிஸ்டு தலைவர் தோழர் அசோகமேத்தா, காங்கிரசின் சார்பிலே தேர்தல் பிரசாரம் செய்தார். அதுபோது, இம்முறை காங்கிரஸ்மந்திரிசபை, முன்புஇருந்ததுபோலட் பிற்போக்காக இராது என்று உறுதிகூறி, "ஓட்" கேட்டார். அன்று ஆச்சாரியார் மந்திரி சபையின் போக்கை நாம் கண்டித்தபோது, நெரித்த புருவத்துடன் இருந்தவர்களெல்லாம், தோழர் அசோகமேத்தா பழைய காங்கிரஸ் மந்திரிசபை பிற்போக்காக இருந்ததை ஒப்புக்கொண்டு பேசியதுகேட்டுத்தலையைத்தொங்கவிட்டுக்கொண்டனர்.

"ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் நல்ல அறிவாளிதான். ஆனல் அவருடைய பிற்போக்கின் காரணமாக கவர்னர்களுக்கும் ஏகாதிபத்யத்துக்கும் நல்ல பிள்ளையாக இருக்கவிரும்பி ஆட்சி புரிந்ததால், 1942ல் நம் சகோதரர்கள் பல கஷ்டங்களுக்கு ஆளாகி உயிரும் துறக்க நேரிட்டது. அதுமாத்திரமல்ல. பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் கொடியைப் பறக்கவிட்டு, அதற்குக் கீழே ஆட்சி புரிந்தார்கள்."

என்று தோழர்அசோகமேத்தா கூறினர். அன்று நடைபெற்றஆட்சியின் அவலட்சணத்துக்கு இதைவிட வேறு என்ன இடிவேண்டும்! இந்தப் பூணுரம் பூண்ட புதுமை. பூசுரத் தலைவருக்குக்கிடைத்தது.

—●—

### வேண்டுகோள்

மன்னர்குடியிலுள்ள "திராவிட நாடு" வாசகர்களில் தங்கள்சந்தாப் பாக்கியைச் செலுத்தாமல் இருப்பவர்கள், அன்புகூர்ந்து உடனே சந்தாப்பாக்கியைச் செலுத்திரசீது பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

**கே. வி. ஜெயராம்**
ஏஜண்டு
"திராவிடநாடு" மன்னர்குடி

### சேலம் குகை திராவிடர் கழகம்

சென்ற 24—2—46 தேதியன்று மாலை சேலம் குகையில் மாகாண திராவிட கழகக் கமிட்டி உறுப்பினர் தோழர் கே. ஜெகதீஸ் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர் ஆர். வி. ராஜாராமலிங்கம் அவர்களைத் தலைவராகக்கொண்ட திராவிடர் கழகம் அமைக்கப்பட்டது.

### பிறப்பு

சென்னை, இரட்டைமலை சீனுவாசன் நினைவுக்கழக அங்கத்தினர் தோழர் நாராயணசாமி அவர்கட்கு ஒரு ஆண்மகவு பிறந்ததன் நினைவாகத் "திராவிடநாடு" வளர்ச்சிக்கு ரூபா 1, தரப்பட்டது.

## எங்கள் குற்றத்தை

2-ம் பக்கத் தொடர்ச்சி

ஏட்டில் எவ்வளவோ இருக்கிறது அவைகளெல்லாம் உண்மையா? நடக்கும் காரியமா? நியாயமா? என்பதை நாம் ஆலோசித்துப் பார்க்கவேண்டும். பழைய ஏடுகளிலும் பல தெய்வங்களிடமும் ரிஷி, மகாத்மா என்கிறவைகளில் நாம் எவ்வளவு நம்பிக்கை வைத்துக் கொண்டிருக்கிறேமோ அவ்வளவுக்கும் நம்மைப் புரோகிதன் பயமுறுத்திக்கொண்டே இருப்பான். அதற்குப் பயப்படுகிறவரையிலும் சின்னத்தலை என்றே சொல்லுவார்கள். சுயமரியாதையை இழந்திருப்பதுதான் மரியாதை என்று நினைத்துக்கொண்டிருக்கிற வரையிலும் சின்னத்தலை, சின்னத்தலைதான்.

பார்ப்பனர்களுக்கு விதித்தஆறு தொழில்களில் சங்கீதம் சேர்க்கப்படவில்லை. சங்கீதத் தொழில்செய்கிற பார்ப்பனனைப் பார்ப்பனத்தன்மை நீக்கி விடுகிறது. மேலும் அதிலேயே ஜீவனம் செய்கிறவன் பிரஷ்டன் என்று பார்ப்பன தருமசாஸ்திரமான ஸ்மிருதிகள் சொல்லுகின்றன. சாஸ்திரத்தால் பார்ப்பனத்தன்மையிலிருந்து நீக்கப்பட்டுப் பிரஷ்டனுக இருக்கும் பார்ப்பனச்சங்கீத வித்வான் ஒருசைவனை பார்ப்பன சுமார்த்த மதத்தைப் பிரசன்ன பௌத்த கிரீச்சுரவாதம் என்று சொல்லும் தேசிகர் என்ற கூட்டத்து வித்வானைச் சூத்திரன் என்கிற கற்பனையால் குற்றம் சொல்லுவதானல், சைவர்களும், தேசிகர்களும், சைவ மடாதிபதிகளும் பார்ப்பனர்களைக் கைலாச கோட்டை அதிகாரிகளாக்கிக் கொண்டிருப்பதென்றுதானே சொல்ல வேண்டும்.

கல்கி பத்திரிகையைக் கொளுத்தினர்களாம், தள்ளினர்களாம் என்று பத்திரிகையில் படித்தேன். அது அவர்கள் வெறுப்பைக்காட்டுவதற்கு. அதனல் விவகாரம்முடிவடையாது. படிக்கவேண்டும், புத்தியை விசாலப் படுத்திக்கொள்ள வேண்டும். அவரவர்களுக்குத் தகுந்தபடி பொருள்சம்பாதித்துக்காப்பாற்றப் படவேண்டும். கோபத்தைக்குறைதது் சிந்தனசக்தியை விருத்திசெய்யவேண்டும்.நம்பேரில் கெட்ட எண்ணமுள்ளவர்கள், தாழ்த்தி நினைப்பவர்கள், நம்காரியங்களுக்குக் கெடுதல் செய்வார்கள். அதைக் கவனிக்கவேண்டும். ஒரு முகப்படவேண்டும். ஒன்ருகவேயிருக்கவேண்டும். ஆலோசனையில் பிளவு இருந்தாலும் அந்தரங்கத்தில் பிளவுஇருக்கக்கூடாது. நமக்குள் சில்லரைச்சண்டை, அற்பகை, அற்பப் பெருமைகளுக்கெல்லாம் இதுவன்று காலம். சிறுதயவுக்காக நமக்குள் சண்டை போடும் காலம் போய்விட்டது. அவைகளையெல்லாம் விட்டு ஒரு பெரும்முயற்சி செய்யும் காலம் வந்து விட்டது. அப்பொழுதுதான் திராவிடக்கொடியின்கீழ் இருந்து எல்லோரும் பெரிய தலையாய்வாழ்வோம்.

—

### அனுதாபம்

திருச்சி சிட்டி அமைச்சூர்ஸ் காரியதரிசி தோழர் தி. சு. மாணிக்கம் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் 28—2—46ல் சேலத்தில் இயற்கை எய்தியது தெரிந்து கிருஷ்ணன்நாடகசபையினர் தங்களின் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்ளுகிருர்கள்.

### இறுதிக்கடன்

வைப்பூர்தி தோழர் R. பச்சையப்பன் அவர்களின் தாயார் இறுதிக்கடன் 30—1—46ல் புரோகிதமற்ற முறையில் நடந்ததை முன்னிட்டு ரூ. 1, திராவிடநாடு வளர்ச்சிக்கு அளிக்கப்பட்டது.




Edited Printed and Published by C. N. Annadurai M.A., at "Dravida Nadu" Press, 317—319 Hodgsonpet, Conjeeveram.